# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 02 வியாழக்கிழமை (17.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 356


# தேர்தலில் அக்கறையற்ற போக்கு என்ற நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை

## புலிகள் மீண்டும் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவம்பர்17

**இன்று இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறையற்ற போக்கைக் கடைப்பிடிப்பது என்ற விடுதலைப் புலிகளின் தீர்மானத்தில் மாற்றமில்லை என்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் நேற்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் மாற்றிக் கொண்டார்கள் என நேற்றையதினம் கொழும்பில் வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலிகள் நேற்று திட்டவட்டமாகவும், முற்றுமுழுதாகவும் நிராகரித்துவிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான புலிகளின் நிலைப்பாடு மாறியுள்ளதாக நேற்று கொழும்பில் இரு ஆங்கிலப் பத்திரிகைகளும், சிங்களப் பத்திரிகையொன்றும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஆனால், நேற்று 'ரொய்ட்டர்' செய்தி நிறுனத்திற்குக் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ். புலித்தேவன், அந்த செய்தி முற்றுமுழுதாக சோடிக்கப்பட்ட ஒன்றென்றும், இரண்டு பிரதான வேட்பாளர்கள் மீதும் நம்பிக்கையிழந்திருப்பதால் தேர்தலில் அக்கறையற்ற போக்கைக் கடைப்பிடிப்பது என்ற புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பின் பின் தேவைப்பட்டால் ஊரடங்கு அமுல்

கொழும்பு, நவ.17

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் முப்படைகள் மற்றும் பொலீஸ் சேவைகளைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வன்முறைகள் இடம் பெறலாமெனக் கருதப்படும் பகுதிகளில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் நிலைவரம் அமைதியாக இருப்பதாகவும், தேவைப்படின் இன்றைய தினம் வாக்களிப்பின் பின் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுமென்றும் இராணுவப் பேச்சாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் போலிப்பிரசுரம்

நூரளை, நவ.17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பின்பற்றி வந்த தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுவிட்டதாகத் தெரிவித்து நேற்றைய தினம் மலையகப் பகுதிகளெங்கும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதால் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

மத்திய மாகாண சபையின் உறுப்பினரும், இ.தொ.காவின் உபதலைவருமான வீ.இராதாகிருஷ்ணனின் கடிதத் தலைப்பையும், கையொப்பத்தையும் பயன்படுத்தி இ.தொ.காவிற்கு எதிராக இயங்கும் ஒரு குழுவினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அன்றாடச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு

## தமிழர் தாயகத்தில் இன்று கரிநாள்; இதன் மத்தியில் ஜனாதிபதித் தேர்தல்

யாழ்ப்பாணம்,நவ.17

தமிழ் மக்கள் அன்றாடச் செயற்பாடுகளை நிறுத்தி கரிநாள் அனுஷ்டிக்கவேண்டும் எனத் தமிழ்ப் பிரதேச பொது அமைப்புகள் பலவும் அழைப்பு விடுத்துள்ள சூழ்நிலையில், இன்று இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இடம்பெறுகிறது.

தமிழ் மக்களை தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கிவரும் சிங்கள அதிகாரமையத்தின் மற்றொரு தெரிவுக்காக நடத்தப்படும் ஜனாதிபதித்தேர்தலைப் புறக்கணிக்குமாறும் -

தேர்தல் தினத்தன்று தமிழ்மக்கள் அனைவரும் தமது அன்றாடச் செயற்பாடுகளை நிறுத்தி துக்கதினம் அனுஷ்டித்து எமது இன ஒற்றுமையை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டும்படியும் - தமிழ்ப்பிரதேசப் பொது அமைப்புகள் பலவும் அழைப்பு விடுத்திருந்தன.

இதனால், இன்றைய வாக்களிப்பின்போது வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகப் பிரதேசத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் இருவரின் கொடும்பாவிகள் நேற்று எரிப்பு!

### திருநெல்வேலிச் சந்திப் பகுதியில்

யாழ்ப்பாணம், நவ.17

இன்று நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலை எதிர்த்து, பிரதான வேட்பாளர்களின் கொடும்பாவிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று எரிக்கப்பட்டன.

முற்பகல் 11.00 மணிக்கு திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் கூடிய இளைஞர்கள் பலர், பிரதமரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பல இடங்களில் நேற்றுக் கைக்குண்டு வீச்சுகள்

யாழ்ப்பாணம்,நவ.17

குடாநாட்டின் பல்வேறு இடங்களில் நேற்றுப் பரவலாகக் கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஈ.பி.டி.பி. முகாம்களையும் படையினரின் காவலரண்களையும் இலக்குவைத்தே இத் தாக்குதல் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும், இவற்றில் உயிரிழப்புகள் எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் சாவகச்சேரி கண்டிவீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியின் அலுவலகத்துக்கு அருகில் தேர்தல் பிரசார நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்த வாகனம் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்று கூறப்படுகிறது. இதற்கு சற்று நேரத்துக்கு முன்னர் சாவகச்சேரி, கச்சாய் வீதியில் அமைந்

(12ஆம் பக்கம் பார்க்க)

### திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடைய நபருக்கு 'பகிரங்க தண்டனை'

## மரத்தில் கட்டிவைத்த இளைஞரை பொதுமக்கள் அடித்துக் கொன்றனர்!

### யாழ். நகர் அருகே நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ 17.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடனும் தொடர்புடையவர் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் கட்டி வைக்கப்பட்டபின் பொதுமக்களால் அடித்துக் கொல்லப்பட்டார்.

அரியாலையைச் சேர்ந்த மைக்னேசி தினேஷ் (வயது20) என்ற இளைஞரே இவ்வாறு அடித்துக் கொல்லப்பட்டார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைப் பகுதியில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது. பாடசாலை முன்பாக வீதியோரத்தில் இருந்த மரம் ஒன்றில் இந்த இளைஞர் கட்டப்பட்டிருந்ததை அதிகாலையில் பொதுமக்கள் கண்டனர். அவர் அருகே வாசகங்கள் எழுதப்பட்ட அட்டை ஒன்று காணப்பட்டது.

கலாசாரம் பேணும் இளைஞர்கள், என்ற அடிக்குறிப்புடன் காணப்பட்ட அந்த அறிவித்தலில் "யாழ். மக்களே! எமது போராளிகள் யாழ். மண்ணைவிட்டு வெளியேறிய பின்னர் திருட்டுச்சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது அனைவரும் அறிந்ததே. இதனைத்தடுக்க யார் இருக்கிறார்கள் என்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையிலிருந்து விலகி கைதானோர் தப்பினர்

குருநாகல், நவ.17

இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய பின்னர் கைதுசெய்யப்பட்டு குருநாகல், போயகனே இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் 13பேர் நேற்றுமுன்தினமிரவு மீண்டும் தப்பியோடியுள்ளனர். இவர்களில் ஒருவர் நேற்றுப்பிற்பகல் கைதுசெய்யப்பட்டார்.

குருநாகல் மாவட்டத்தில் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் உட்பட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைத் தேடி நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது இராணுவத்திலிருந்து தப்பியோடிய 13பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இராணுவத் தலைமையகத்திடம் ஒப்படைப்பதற்காக போயகனே இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதே

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று வன்செயலை கட்டவிழ்த்துவிடத் திட்டம்; மக்களை எச்சரிக்கின்றது மாணவர் ஒன்றியம்!

யாழ்ப்பாணம்,நவ.17

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்குத் தமிழ் மக்கள் தீர்மானித்துள்ள சூழலில் குடாநாட்டில் இன்று பரவலாக வன்செயல்களில் ஈடுபட தேசவிரோத சக்திகள் திட்டமிட்டுள்ளன.

இந்தச் சக்திகளிடம் சிக்காமல் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்துகொள்ள பொது மக்கள் வீடுகளில் தங்கி இருங்கள்.

- இவ்வாறு எச்சரிக்கை செய்திருக்கின்றது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பாக ஒன்றியம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பது யாவரும் அறிந்ததே. இதனால், ஆத்திரம் கொண்ட தேசவிரோத, அந்நிய சக்திகள் பரவலாக கடுமையான வன்முறைகளில் ஈடுபடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. இதற்காக தென்னிலங்கையிலிருந்தும் அந்நிய சக்திகளை வரவழைத்துள்ளனர்.

எனவே, நாம் விழிப்புடன் செயற்படவேண்டும். எமது பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்தும் முகமாக இன்றையதினம் எமது அன்றாட செயற்பாடுகளைத் தவிர்த்து வீடுகளில் அமைதியாக இருந்து இத்தேசவிரோத சக்திகளின் கபட நோக்கான சதித்திட்டத்தை முறியடித்து எமது தேசிய ஒற்றுமையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வீதி ஓரங்களில் வாக்காளர் அட்டைகள்

கரவெட்டி,நவ.17

வடமராட்சியில் வீதி ஓரங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளில் ஒருதொகுதி சேதமாக்கப்பட்ட நிலையிலும் குவியலாக எரிந்தநிலையிலும் நேற்றுக் காணப்பட்டன.

சில வாக்காளர் அட்டைகள் துண்டு துண்டாக கிழிக்கப்பட்டும் அதிலுள்ள வாக்காளர்களின் பெயர்கள் தெரியாதபடி அழிக்கப்பட்டும் வீசப்பட்டிருந்தன.

குறிப்பாக கரவெட்டி - கொடிகாமம் வீதி, தும்பளை - வல்லிபுரக் கோவில் - பருத்தித்துறை, காங்கேசன்துறை வீதி ஓரங்களில் வாக்காளர் அட்டைகள் அதிக எண்ணிக்கையில் வீசப்பட்டிருந்தன. (ஒ-70)

## கல்முனையில் ஊர்காவலர் பட்டப்பகலில் சுட்டுக்கொலை!

கல்முனைப் பொலீஸ் நிலையத்திலிருந்து சுமார் 75 மீற்றர் தூரத்தில் பட்டப்பகலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அம்பாறை மகா ஓயாவைச் சேர்ந்த எம். ரஞ்சித் குமார (வயது 32) என்ற ஊர்காவலரே உயிரிழந்தார்.

இவர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமைபுரிபவர் என்றும் கல்முனை நகரில் நேற்றுக் கடமை புரிவதற்காக நடந்து சென்று கொண்டிருந்தசமயம் அவர் சுடப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் மற்று மொருவரின் மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பி ஓடிவிட்டார் எனக் கூறப்படுகின்றது. கல்முனைப் பொலிஸார் மேல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாக்குப்பெட்டிகளோடு பணியாளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு புறப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.17

இன்றைய வாக்களிப்பை ஒட்டி வாக்குப் பெட்டிகள் நேற்றுக்காலை முதல் யாழ். அரச செயலகத்தில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகளும் நிலையங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் முதலில் யாழ். மத்திய கல்லூரியில் ஒன்றுகூட்டப்பட்டனர். பின்னர் பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் அவர்கள் செயலகத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு வைத்து வாக்குப்பெட்டிகளும் ஆவணங்களும் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வாக்குப்பெட்டிகளோடு அவர்கள் பின்னர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றனர்.

வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரியவுள்ள அரச பணியாளர்களுக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கான பொலீஸ் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையங்களிலும் பெரும் எண்ணிக்கையான பொலீஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை -

எந்த வேளையிலும் நிலைமையைச் சமாளிக்கப் பொலீஸ் அணிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. யாழ். பொலீஸ் நிலையத்தில் கலகத்தடுப்பு வாகனங்களும் 'பவள்' கவச வண்டிகளும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. (ஐ-7-15-17)



வாக்குப்பெட்டிகளைப் பொறுப்பேற்று எடுத்துச்செல்கின்றனர். படம்: பிரபா.

## பொலன்னறுவையிலும் நேற்று ஊர்காவலர் சூட்டுக்குப் பலி!

பொலன்னறுவை, நவ.17

பொலன்னறுவை, திம்புலாகல மில்லானை என்னுமிடத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்தார். படுகாயமடைந்த மற்றுமொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அந்தபான்கல என்னுமிடத்தில் இரவு நேரக் கடமையை முடித்துவிட்டு இவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. அஸந்த பத்மகுமார (20 வயது) என்பவரே உயிரிழந்தவராவார். பிரேம திலக்க வயது 34 என்பவர் படுகாயமடைந்தார்.

ஊர்காவல் படையினர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர்கள் காட்டுக்குள் தப்பியோடி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொலன்னறுவைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து திம்புலாகல பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்திய போதும் சந்தேகத்திற்கிடமான எவரும் கைது செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

## நடுக்கடலில் படகு உடைந்தது; மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனர்

### வடமராட்சியில் நேற்றுமுன்தினம் சம்பவம்

வடமராட்சி,நவ.17

வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மூவர் நடுக்கடலில் படகு உடைந்ததினால் நீந்திக்கரை சேர்ந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த சி. ஜெயரட்ணம் (வயது - 24), த.மகேசன் (வயது - 24), எஸ்.இராஜேந்தி (வயது - 19) ஆகியோரே நீந்திக் கரைசேர்ந்தவர்களாவர்.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட படகு ஒன்றில் இந்த மீனவர்கள் மூவரும் செவ்வாய் இரவு மீன்பிடிக்கச் சென்றனர். கரையில் இருந்து சுமார் 16 கடல்மைல் தொலைவில் படகு சென்றுகொண்டிருந்த வேளை திடீரென அது உடைந்தது. இதனால் அதிலிருந்த மூன்று மீனவர்களும் கடலில் விழுந்தனர். எனினும் தெய்வாதீனமாக மூன்று மீனவர்களும் நீந்திக் கரைசேர்ந்தனர். (8-173)

## சமாசக்கட்டடத்தில் கண்காணிப்பாளர் அலுவலகம்

வடமராட்சி,நவ.17

வடமராட்சியில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் அலுவலகம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கச்சமாசக் காரியாலயத்தில் செயற்படவுள்ளது.

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின்போது வடமராட்சிக்கான பிரதேசக் கண்காணிப்பு நிலையமாக இன்று காலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை மேற்படி சமாசக் காரியாலயத்தின் ஒருபகுதி செயற்படும் என்று வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது. (ஒ-70)



பல்வேறு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் இளைஞர் பொதுமக்களால் தாக்குண்டு உயிரிழந்தார். யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் கிடந்த அந்த இளைஞரின் சடலத்தைப் பொதுமக்கள் கூடிநின்று பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- கவிதரன்)

## வீடு புகுந்து தாக்கியோர் அயலவரிடம் சிக்கினர்

இரவுவேளையில் வீடொன்றிற்குள் புகுந்து தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்றை அயலவர்கள் மடக்கிப்பிடித்து கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் புத்தூர் மந்திரிமலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 15 பேர் கொண்ட இந்தக் கும்பல் புத்தூர் பகுதியில் வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்தோரைக் கடுமையாகத் தாக்கியது. இதனால் வீட்டிலிருந்தோர் எழுப்பிய அவலக்குரல் கேட்டு ஒன்றுகூடிய அயலவர்கள் அந்தக் கும்பலை மடக்கிப்பிடித்து நையப்புடைத்தனர்.

அதன்பின்னர் அந்தக் கும்பல் வந்த மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (8-7)

## பொல்லுகளுடன் நின்ற கும்பல் பிடிபட்டது

கோண்டாவில் பகுதியில் தடிகள், பொல்லுகளுடன் குழுமி நின்ற கும்பலொன்றை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப்பிடித்து கோப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றது.

அக்கும்பலை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப்பிடிக்க முயற்சித்தனர். அப்போது கும்பலைச் சேர்ந்தவர்கள் தப்பியோடினர். அவர்களில் 8 பேர் மட்டும் சிக்கிக்கொண்டனர். அவர்கள் ... பொலீஸாரிடம் ... எட்டுப்பேரும் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ-49)

## சாயி சிந்தனை

### எங்கும் நிறைந்தது இறைசக்தி!



இந்த இயற்கைக்கு ஈர்ப்பு சக்தி இருக்கிறது! இது காந்த சக்தி என்றும் அழைக்கப்படுகிறது. இதன் ஈர்ப்பு சக்தி மிகவும் வலிமை வாய்ந்தது. இந்த இயற்கையின் அருகில் எது வந்தாலும், அது ஈர்க்கப்பட்டு விடுகிறது. அப்படி ஈர்க்கப்படும் பொருள்களில் இந்த சக்தி நிறைகின்றது. இதைத் தற்போது சில விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து, கண்டு பிடிக்க முயற்சி செய்கிறார்கள்.

ஒரு கோயில் இருக்கிறது. என வைத்துக் கொள்ளுங்கள். ஆயிரக்கணக்கான பேர் இந்த கோயிலுக்கு வந்து தரிசிக்கிறார்கள். அந்த விக்ரகத்திற்கு ஒரு ஆகர்ஷண சக்தி இருக்கிறது.

ஆயிரக் கணக்கில் பக்தர்கள் வந்தாலும் ஒவ்வொருவரிடமும், நல்ல உணர்வுகளைத் தூண்டிவிட்டு, அவற்றை அந்த விக்ரகமும் தன்னுள்ளே ஈர்த்துக் கொள்கிறது. இதன் மூலம் அதன் ஆகர்ஷண சக்தி அதிகமாகிறது. அதனால் அந்த உருவத்தை வழிபடும் பக்தர்களுக்கும் அந்த சக்தி பரவி அதிகரிக்கின்றது.

எப்படி என்றால், ஒரு காந்தத்தின் மேல், சில இரும்புத் துண்டுகளை, வைத்து, இரண்டு நாள்கள் கழித்துப் பார்க்கும் போது அந்த காந்தசக்தி, இரும்புத் துண்டுகளிலும் பரவி இருப்பதைக் காண முடியும்! அதே போல கோயில்களில் தெய்விக வடிவம், மக்களை ஈர்த்து லட்சக்கணக்கான வர் நல் இதயத்துடன், நல் உணர்வுகளுடன் வணங்கும் போது அவற்றைத் தன்னுள் இழுத்துக் கொண்டு, மிகுந்த சக்தி வாய்ந்த வடிவமாக மாறுகிறது.

அத்தகைய சக்தி மிகுந்த வடிவத்தை வணங்கும் போது, வழிபடும்போது தன்னிடம் இருக்கும் சக்தியைத் தன்னை ஆராதிப்பவருக்கும் அளிக்கிறது. அந்த விக்கிர சக்தியாற்று எதுவுமே இந்த உலகில் கிடையாது. எல்லா இடத்திலும் அனுகக்தி பரவியிருக்கிறது.

ஆதாரம் - சனாதன சாரதி

(1993)


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation

New way of flying

Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇌கொழும்பு | யாழ்⇌திருகோணமலை⇌கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர் தரப்பின் நியாயம்

இலங்கைத் தீவில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. இந்தச் சமயத்தில் இத்தீவு தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறுகின்ற சில உண்மைகள் கவனிக்கத்தக்கனவாக இருக்கின்றன.

*" இலங்கைத் தீவில் தமிழர் தாயகம் தனி அரசாக இருந்தது. இந்த வரலாற்று உண்மையை தென்னிலங்கைச் சிங்களம் ஏற்க மறுக்குமானால் - அங்கீகரிக்கத் தவறுமானால் - அதற்கான விலையை அது ஒருநாள் கொடுக்க நேரிடும். அந்த விலை அதற்கு மிகக் கடுமையானதாக - ஈடு செய்யப்பட முடியாத பேரழிவாக - இருக்கும்."* - என்று எச்சரித்திருக்கின்றார் அவர். சர்வதேச ஆங்கில ஊடகமான 'ரைம்ஸ்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

*"தமிழர் தாயகம் என்பது வரலாற்று உண்மை. வரலாற்றை ஒருதடவை தென்னிலங்கை திரும்பிப் பார்க்க வேண்டும். 16 ஆம் நூற்றாண்டுவரை இலங்கைத் தீவில் தமிழர்களுக்கென இறையாண்மையுள்ள ஒரு நாடு இருந்தது. அது வெளிப்படையான உண்மை. உயர்ந்த பண்பாட்டுடனும் கலாசாரத்துடனும், தமிழ் மக்கள் தங்கள் சொந்த நாட்டில் வாழ்ந்தனர். இழந்துவிட்ட அந்த நாட்டை தமிழ் மக்கள் தற்போது மீட்டு எடுக்கிறார்கள். எமது தாயகத்தில் அறுபது முதல் எழுபது வீதமான எமது தாயகப் பகுதியை விடுதலை செய்துள்ளோம். இந்தச் செயற்பாடு அடுத்த கட்டத்துக்கு நகர்வதை எவராலும் தடுக்க முடியாது."* - என்று தெளிவுபடக் கூறியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

அதுமட்டுமல்ல. இலங்கையின் அரசுக் கட்டமைப்புக் குறித்தும் அவர் குறிப்பிட்டிருக்கும் கருத்து முக்கியத்துவமானது.

*"தென்னிலங்கைத் தரப்பினர் கூறுவது போல ஒற்றையாட்சிக் கோட்பாடு என்பது கற்பனையானது; அர்த்தமற்றது. இந்த உண்மையை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தால் அதற்கான உரிய விலையை - கடுமையான, பேரழிவைத் தரக்கூடிய விலையை - அவர்கள் கொடுக்க வேண்டியதாயிருக்கும்"* - என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் இலக்கு முழுமையான அரசியல் விடுதலைதான். அதைப் பேச்சுகளின் ஊடாக - அமைதி முயற்சிகள் வாயிலாக - அடைய முடியுமானால் அதற்கும் தாங்கள் தயார் என்றும், எனினும் இதில் முடிவெடுப்பது தென்னிலங்கை அரசைச் சார்ந்த விடயம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆக மொத்தத்தில், தமிழர் தாயகம், அவர்களின் தேசியம், சுயநிர்ணயம் ஆகிய விடயங்களை ஏற்பதற்கு தென்னிலங்கைத் தலைமைகள் இணங்காவிடின் விளைவு விபரீதமாகும் என்பதே தமிழ்சசெல்வன் கூறியுள்ள கருத்துக்களின் சாரமாகும்.

தொன்மைவாய்ந்த - புராதனமான - இரு நாகரிகங்களின், தேசியங்களின் வரலாற்றுத் தாயகமாகவே இலங்கைத்தீவு விளங்கி வந்திருக்கிறது. பண்பாட்டில், பாரம்பரியத்தில், மொழியில், கலாசார வேர்களில், வாழிட நிலப்பரப்புகளில், வெவ் வேறான - வேறுபட்ட - இரு தேசிய இனங்களின் சரித்திர பூர்வத்தயாகமாக - களமாக - இலங்கைத்தீவு இருந்து வந்திருக்கிறது.

1605 நவம்பர் 18 ஆம் திகதி - அதாவது சரியாக நாளைய தினத்துக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் - இலங்கைத் தீவில் போர்த்துக்கீசர்கள் காலடி எடுத்துவைத்தபோது இந்த நாட்டில் தமிழர், சிங்களவர் ஆகிய இரு தேசிய இனங்களும் தனித்தனி அரசுகளோடு - தனித்தனி இராச்சியங்களோடு- வெவ்வேறு நாடுகளாக வசித்துக் கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

போர்த்துக்கேயர்கள் 1619 இல் தமது அந்நியப்படை எடுப்பின்மூலம் வடக்கைக் கைப்பற்றும்வரை இந்தத் தீவில் தமிழர் தேசம் தனியாகக் கோலோச்சிக்கொண்டிருந்தது.

தமிழர் தாயகத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரும் அதைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் தமிழர் தாயகத்தை தமது ஆளுகையில் வைத்திருந்த போதும் அதனைத் தனி அரசாகவே ஆண்டனர்.

ஆனால், அதன் பின்னர் தமிழர் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் ஒரே சமயத்தில் தமது ஆளுக்கைகுள் கொண்டு வந்த அடுத்த அந்நியரான ஆங்கிலேயர், 1833 இல் தமது வசதிக்காக இந்த இரண்டு தேசங்களையும் ஒன்றாக்கி ஒற்றையாட்சி முறையை நம்மீது திணித்தனர். இப்படித்தான் அந்தியக் குடியேற்ற வாதம் இந்தத் தீவில் ஒரு தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளமிட்டது.

அப்படி அந்நியக் குடியேற்றத்தினால் பறிக்கப்பட்டு, பின்னர் அவர்கள் வெளியேறும்போது இத்தீவில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது தமிழர்களின் இறையாண்மை. அதை மீட்டெடுக்கவே தமிழர்கள் இப்போது போராடுகின்றார்கள் என்பதை விளக்குகிறார் தமிழ்ச்செல்வன்.

தமிழர் தரப்பின் இந்த நிலைப்பாட்டைத் தெளிவாகப் புரிந்துகொண்டு இன்றைய தேர்தல் குறித்துத் தென்னிலங்கை, தீர்மானம் எடுக்கவேண்டும்.

தென்னிலங்கையில் தெரிவு செய்யப்படப்போகும் தலைமையும், தமிழர் தரப்பின் யதார்த்த பூர்வமான இந்த நிலைப்பாட்டின் நியாயத்தைப் புரிந்துகொண்டு செயலாற்ற முன்வருமானால் எதிர்காலம் வளமாக அமையும். அப்படி இல்லாமல் அதுவும் பழைய மாதிரியே பௌத்த-சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்த நிலைப்பாட்டையே கைக்கொள்ளுமானால், தமிழ்ச் செல்வன் கூறியமை போன்று விபரீதவிளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும்.

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் குறித்து தமிழ் மக்கள் கவலைப்பட மாட்டார்கள்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை முற்றாகப் புறக்கணிக்கிறார்கள். எனவே, தேர்தல் முடிவுகள் தொடர்பாக - யார் வென்றாலும் தோற்றாலும் தமிழ் மக்கள் எந்தவிதத்திலும் கவலைப்பட மாட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்.

'ரைம்ஸ்' பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த செவ்வியில் மேலும் அவர் தெரிவித்ததாவது:-

நாங்கள் இந்தத் தேர்தல் தொடர்பாக அக்கறை கொள்ளவில்லை. இரு கட்சிகளுடனான எமது அனுபவங்களின் அடிப்படையில் அனைவருமே தமிழ்த் தேசிய இனப்பிச்சினை பற்றிப் பேசுகின்றனர். வாக்குகளுக்காகத்தான் அவர்கள் பேசுகிறார்கள். தேர்தலுக்குப் பின்னர் இதைக் கருத்தில் எடுக்காது விட்டுவிடுகிறார்கள்.

மஹிந்தவினது செயற்பாடுகள் ஆபத்துகளைவெளிப்படையாகச் சொல்லுகின்றன. ஆனால், ரணிலைப் பொறுத்தவரை எமது அனுபவத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அதிக சந்தர்ப்பங்கள் இருந்தும் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. எமது மக்கள் இன்று நம்பிக்கையற்று விரக்தி நிலையில் இருப்பதற்கு யார் பொறுப்பானவர் என்றால் ரணில்தான் என்பதில் சந்தேகமே இல்லை. அவர் எதையுமே செயற்படுத்தவில்லை.

மக்களின் நிலை யுத்தத்தை நோக்கிச் செல்லும் என்று கண்டிப்பாக நாம் கூற முடியாது. ஆனால், மக்களே நீதிபதிகள் எங்களுக்கு எம் மக்களே உத்தரவிடுவார்கள். அவர்கள் கடந்த சில மாதங்களாக ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். மக்கள் சக்தியை இராணுவ ஒடுக்குமுறை மூலம் அழிக்க நினைத்தால் நிச்சயமாக அந்த மக்கள் ஜனநாயகப் பாதைக்கு எதிராகத் திரும்புவதைக் கட்டுப்படுத்த முடியாது.

மக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்தால் மக்களே ஆயுதங்களை ஏந்துவார்கள். அந்த நெருக்கடியான நேரங்களில் எமது தலைமைப்பீடம் மக்களுக்குப் பின்னால் நிற்பதற்கு முடிவு செய்யும்.

தமிழர் தாயகத்தின் எந்தப் பகுதிக்கும் சென்று பார்க்கலாம். எம் மக்கள் தேர்தலில் ஆர்வம் கொள்ளாதிருப்பதை. அவர்கள் புதிதாக எதையும் பார்த்துவிடவில்லை அவர்கள் எந்த ஒரு புதிய நம்பிக்கையையும் பெற்றிருக்கவில்லை.

ரணிலின் யாழ்ப்பாணப் பயணத்தைப் பார்த்தால் அவர் பலாலி இராணுவத் தளத்திற்குச் சென்றார். அங்கு இராணுவத்தினர் மத்தியில் இராணுவத்தை நவீன மயமாக்கப் போவதாகவும் ஆயுதங்கள் வாங்கப் போவதாகவும் கூறியிருக்கிறார். அவர் தமிழ் மக்களைச் சந்திக்கவில்லை. அவர்களது குறைகளைக் கேட்கவில்லை.

இலங்கைத் தீவில் தமிழர்களின் தாயகம் இருந்ததென்ற வரலாற்று உண்மையை ஸ்ரீலங்கா அரசு நிராகரிக்குமேயானால் அதற்கான விலையை ஒருநாள் அவர்கள் கொடுக்க நேரிடும் அவ்விலை மிகக் கடுமையானதாக -ஈடு செய்ய முடியாத பேரழிவாக இருக்கும்- என்றார். (த-202)

### ஜனாதிபதித்தேர்தல் சில தகவல்கள்

- ஜனாதிபதித்தேர்தல் செலவு - 100 கோடி ரூபா.
- மொத்த வாக்காளர்கள் ஒரு கோடியே 33 லட்சத்து 27 ஆயிரத்து 160 பேர்.
- வேட்பாளர்கள் 13 பேர்.
- வாக்களிப்பு நிலையங்கள்10 ஆயிரத்து 486.
- வாக்கு எண்ணும் நிலையங்கள் -710.
- வடக்கு - கிழக்கில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்.
- புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு அரச செலவில் போக்குவரத்து வசதி.
- முறைகேடுகள் இடம்பெற்றால் 19 ஆம் திகதி மீள் வாக்களிப்பு.
- அசம்பாவிதங்கள் ஏற்படாவிட்டால் 18 ஆம் திகதி அதிகாலை ஜனாதிபதியை அறிந்துகொள்ள முடியும்.



யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் பல்கலைக்கழக வளாகத்தினுள் நிறுவப்பட்டிருக்கும் மாவீரர் நினைவுத் தூவியையே படத்தில் காண்கிறீர்கள். புதிதாக நிறுவப்பட்ட இந்தத் தூவி அடுத்த சில நாள்களில் திறந்துவைக்கப்படவுள்ளது. *(படம்: பகீரதன்)*

# சிறுவனிடமிருந்து தங்கச்சங்கிலி அபேஸ்

குரங்கு காட்டுவதாகக் கூறி சிறுவர்களைக் கூட்டிச்சென்ற இளைஞர் குழு ஒன்று சிறுவன் ஒருவனின் கழுத்தில் அணிந்திருந்த ஒன்றரைப்பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தலைமறைவாகியது. இந்தச் சம்பவம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் சுற்றாடலில் இடம்பெற்றது.

புலோலி மேற்கைச் சேர்ந்தோரின் திருமண வைபவம் ஒன்று கடந்த வாரம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் நடைபெற்றது.

இத்திருமணத்துக்காக சென்றிருந்த சில சிறுவர்களிடம் அங்கு வந்திருந்த இனம் தெரியாத சில இளைஞர்கள் குரங்கு பார்க்கலாம் வாருங்கள் காட்டுகிறோம் என்று கூறிக் கோயிலின் புறச் சூழலுக்கு அழைத்துச் சென்று சிறுவர்களில் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தலைமறைவாகினர். (த-173)

### நாளை

கார்த்திகை 03
வெள்ளிக்கிழமை
18.11.2005
திதி: துதியை
முற்பகல் : 06.34 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பின்னிரவு : 03.38 வரை
[illegible]
[illegible] 10.38 - 12.08
(யாவும் பழைய நேரப்படி)

# மணற்காடு மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தருமாறு கோரி மகஜர்

வடமராட்சி, நவ.17

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மணற்காட்டு கிராமத்தை சேர்ந்த 205 குடும்பங்களுக்கு நிரந்தரவீடுகளை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கைகளை எடுக்குமாறு மணற்காட்டு கிராம பொது அமைப்பான ஊரக வளர்ச்சிப் பேரவை யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மணற்காட்டு கிராமமும் ஒன்று. இக்கிராம மக்களுக்கு இடைத்தங்கல் முகாமில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இடைத்தங்கல் முகாமில் நாம் இருப்பதால் அன்றாடத் தொழிலான கடற்றொழிலை மேற்கொள்வது சிரமமாக உள்ளது. அத்துடன் நீண்டகால நோக்கில் இந்த இடைத்தங்கல் முகாம்களில் வாழ்வதால் பல சமூகச் சீர்கேடுகளையும் பலதரப்பட்ட துன்பங்களையும் நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால் நாம் மேலும் பல இன்னல்களை அனுபவிக்கின்றோம்.

எமக்கான நிரந்தர வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் அது மிகவும் சுறுசுறுப்பற்ற நிலையிலேயே சென்றுகொண்டிருக்கின்றது.

அத்துடன், எமது குழந்தைகளின் அத்தியாவசியத் தேவையான கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கான பாடசாலை வசதிகள் எதுவும் இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

எமது இடத்தில் இருந்த பாடசாலை முற்றாகச் சேதமடைந்துள்ளது. அதனை வேறு இடத்திற்கு மாற்றித் தருவதாகக் கூறப்பட்டது. இருந்தும் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

எனவே கல்வியின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு பாடசாலையையும் அமைத்துத்தருமாறு [illegible] கொள்கிறோம் - என்றுள்ளது. (த-203-173)

# இன்னும் சில தினங்களுக்கு மழைபெய்ய வாய்ப்பில்லை

## வானிலை அவதான நிலையம் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.17

குடாநாட்டில் தற்போது நிலவும் கால நிலை- அதாவது மழை இல்லாத மந்தமான நிலை இன்னும் சில தினங்களுக்கு தொடரும் வாய்ப்பு இருப்பதாகத் திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்திற்குரிய சராசரி மழை வீழ்ச்சி 242.8 மில்லிமீற்றராக இருந்தபோதும் கடந்த ஒக்ரோபர் மாதம் 177.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியே பெறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து நேற்று காலை 9 மணிவரை பெறப்பட்ட மழை வீழ்ச்சியின் அளவு 724.7 மில்லிமீற்றர் ஆகும்.

இந்த ஆண்டு டிசெம்பரில் உயர்வான மழை வீழ்ச்சி பெறப்பட வாய்ப்புண்டு எனவும் - அடுத்த சில தினங்களுக்கு மழை பெய்ய வாய்ப்பில்லை என்றும் வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது. (த-12)

### உதயவாக்கு

வலிமையை வலுவிழக்கச் செய்து பலவீனத்தைப் பலப்படுத்தமுடியாது.
*- ஆபிரகாம்லிங்கன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வுப் பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட தனித்தனி நான்கு வீடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன் வெற்றுக்காணியும் விற்பனைக் குண்டு. தொடர்பு: R.P. ஜெயதாஸ். T.P.: 2223360, 077959798. (42864)

### வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. பொ.சொர்ணலிங்கம், 48/3, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 077-9228924. (42731)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து K.K.S. வீதி, கொக்குவிலுக்குமிடையில் 4 பவுண் நகை ஒன்று தவறிவிட்டது (கைச்செயின்). கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: K.சுதாகரன் (சுகி சலூன்), தட்டாதெருச் சந்தி. T.P. 0776170068, 0776653282. (42853)

அமிர்தலிங்கம் சிறீஸ்காந்தன் என்பவருடைய தே. அ. அட்டை (823044089V), மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அட்டை, வேறு ஆவணங்கள் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கரணவாய், மூத்த விநாயகர் ஆலய அருகில் உள்ள வீட்டில் ஒப்படைக்கவும். அல்லது T.P.: 0712 244318 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (42704)

கடந்த 07.11.2005 அன்று முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பி.ப. 3.50 மணிக்கு புறப்பட்ட தனியார் கடுகதி பேருந்தில் ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளம் கொண்டு யோ.செபஸ்தியாம்பிள்ளை, செபஸ்திரியான் வீதி, மாதகல். T.P.: 0712-546627 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (42889)

பாலசுப்பிரமணியம் வைகுந்தன் என்பவருடைய தே.அ.அட்டை (832393690V) பேர்ஸ்சுடன் 14.11.2005 அன்று சுன்னாகத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776121914 எனும் தொலைபேசியுடனோ or பாலாவி, புகையிரத நிலைய வீதி, மருதனார் மடம் எனும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும். (42893)

### கோழிக்குஞ்சு விற்பனை

Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (42860)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42861)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 8 இல் செவ்வாய், கிரகபாவம் 42, அனுஷம், வயது 36 உடைய பட்டதாரி நிர்வாக உத்தியோகத்தர் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு விளம்பர இல.2753, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (42878)

### சேவை

55000 அமெரிக்க விசா விண்ணப்ப முடிவுத்திகதி 04.12.2005 தாமதிக்காமல் விண்ணப்பிக்க முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, பாஸ்போட் அளவு போட்டோவுடன் ரூபா 400/-இற்கான மணியோட்ரை அனுப்புங்கள். குடும்பமாயின் மனைவி, பிள்ளைகளின் தனிப்போட்டோக்கள், பெயர், பிறந்த திகதிகளையும் அனுப்பவும். **Penquin Book shop, $B_2/F_{23}$, Bloemendhal Flats, Kotahena. T.P.: 0773081764.** (சி-46983)

### வியாழ மாற்றம் எப்படி?

விற்பனையாகிறது ரணில் (திருவோணம் மகர ராசிக்கு) 10 இல் வியாழனுடன் குருசந்திர யோகம் புதசுக்கிர ரவிகுஜ ராசியோகம், அமல சந்திர யோகங்கள் அமைவதால் ரணில் ஜனாதிபதி ஆகும் வாய்ப்புண்டு. ''சத்யா'', ஆனைக்கோட்டை. T.P.No.: 0776547175 (42891)

## கட்டாக்காலி நாய்களால் வீதிகளில் தொல்லை

குருநகர்,நவ.17

குருநகர் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளால் போக்குவரத்து நெருக்கடி உருவாகி வருவதாக இவ்வீதிகளுடாகப் பயணிப்போர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீடுகளில் இருந்து திடீரென வீதியில் இறங்கும் வளர்ப்பு நாய்கள் வீதியில் செல்வோரைப் பாய்ந்து பாய்ந்து துரத்தும் சம்பவங்கள் சில வீதிகளில் இடம்பெற்று வருவதனால் இவ் வீதிகளில் பயணிக்கும் சிறுபிள்ளைகளும் வயோதிபர்களும் மிகுந்த உயிராபத்துக்களை எதிர்நோக்கும் அபாயநிலை தோன்றியுள்ளது. எனவே இக்கட்டாக்காலி நாய்களிலிருந்து மக்களைப் பாதுக்காக்க உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (203-51)

## விபத்தில் யுவதி காயம்

தென்மராட்சி,நவ.17

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற கார் - சைக்கிள் விபத்தில் யுவதி காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ் விபத்தில் மிருசுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த பாலசிங்கம் நிஷாந்தி (வயது 17) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-117)

## ஒலிபெருக்கி சாதனங்கள்

குருநகர்,நவ.17

பொது அறிவித்தலை விடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் அண்மையில் ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஒலிபெருக்கி சாதனங்கள் யாவும் சிறுவர் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-51)


இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும்

**உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி - 2005**

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் யாழ். மாவட்ட லீக்குகளுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது லீக் செயலாளர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அவ்விண்ணப்பப்படிவங்களை 25.11.2005 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

முதலாம் இடம் — 10,000/=, வெற்றிக்கேடயம், சுற்றுக்கேடயம்

இரண்டாம் இடம் — 6,000/=, வெற்றிக்கேடயம்

மூன்றாம் இடம் — 4,000/=, வெற்றிக்கேடயம்

நான்காம் இடம் — 2,000/=, வெற்றிக்கேடயம்

தொடர் ஆட்ட நாயகன், சிறந்த ஆட்ட நாயகன், சிறந்த கோல் காப்பாளர், சிறந்த அணி, அதிக கோல் போட்ட வீரர் இவற்றுக்கான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
செயலாளர்,
யங் ஹென்றீசியன் வி.க.,
லில்லி பான்சி ஹவுஸ்,
கல்லூரி வீதி,
இளவாலை.

மேலதிக தொடர்புகளுக்கு - 07760752[illegible]

செ.சுரேந்தா,
செயலாளர்.

(42734)



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
புலோலி

*இன்று (17.11.2005) வியாழக்கிழமை நடைபெற விருந்த விஷ்ணு ஆலய தீப உற்சவம் 14.12.2005 அன்று நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத் தருகிறோம்.*

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
அறங்காவலர் சபை.

(சி/46242)(32-34-15)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 04 1951 — மறைவு 28 11 2004



அமரர்
**ஆறுமுகம் சூரியகுமாரன்**

[சிரேஷ்ட சாலைப் பிரிசோதகர்- ஆளணிப்பிரிவு - வ.பி.போ.ச]

ஆண்டு ஒன்று கடந்தாலும்.
ஆண்டவன் நினைவில் இருந்தாலும்
இன்னும் உம் நினைவுகள் எம்மை
சுற்றி வந்து வாட்டுதையா
நிரப்பிட முடியாத இடைவெளியை
நினைத்தபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

(42895)

492,பொது நூலை வீதி,
கைதடி தெற்கு,கைதடி.

*மனைவி, பிள்ளைகள்.*

## நெஞ்சை விட்டகலாத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 01 01 1943 — கண்நெகிழ 28 11 2004







அமரர்
**முருகேசு சுப்பிரமணியம்**

(குடமியன்-வரணி)

திதி:17.11.2005

உணர்வில் நிறைந்த எங்கள் உயிரே ஐயா நீர்
உள்ளம் நெகிழ வைத்து உம்பருல கடைந்தீரோ?
மணமும் மலருமென மனங்களால் இணைந்திருந்த
மனையாள் மக்களெனும் சுற்றமெலாம் பதறுதையா!
கணமும் மறவோம் உம் கனவுகளை வென்றெடுப்போம்
காலமெல்லாம் உம் பணிகள் கருத்தில் துதித்திடுவோம்!
வணங்கி மலர்தூவி வல்லவரே உம் பாதம்
வழுத்தி அஞ்சலித்தோம்! வல்லவரே அமைதி கொள்க!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வேலுடையார் வீடு,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்,
குடமியன்,வரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை அரவணைப்பில்
17-07-1942

இறைவன் அரவணைப்பில்
28-11-2004

திதி: 17-11-2005

## திருமதி மகேஸ்வரி வேதாரணியம்

எம்மிரு கண்களாயிருந்து
இல்லக் குலவிளக்காய் சுடர்வீசி
அன்பாலே எம்மை அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு நல்வழிகாட்டி
எம்மை ஆளாக்கி வைத்த எங்கள் அன்புத்தாயே!
ஆண்டு ஒன்றென்ன எம் உயிர் உள்ளவரை
ஆறாது அம்மா! இத்துயரம்...

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்த
எம் இனிய தெய்வமே!
பாரினிலே எம்மைச் சிறப்புடன் வாழ
வழிகாட்டிவிட்டு எங்கு சென்றீரம்மா?
புன்னகை தவழும் உங்கள் மதிமுகம் காண
ஏங்குகின்றோம் உம் வரவுக்காய்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
கைலாசபிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் உங்கள் நினைவுடன்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கைலாசபிள்ளையார் கோயிலடி,
333(537A), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.222 7483.

(C/46225)(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்து அழுகிய நிலையில் ஒதுங்கும் மீன்களை அகற்றும் பணி திருகோணமலையில் மும்முரம்

திருகோணமலை நவ, 17

திருகோணமலைக் கடலோரப் பகுதிகளில் இறந்து கரையொதுங்கிய மீன்களை அகற்றும் பணியில் அப்பிரதேச மீனவ சங்கங்கள் ஈடுபட்டுவருகின்றன.

கடந்த சில நாள்களாகத் திருகோணமலை உட்துறைமுக கடற்பகுதியில் இலட்சக் கணக்கான மீன்கள் இறந்து கரையொதுங்கின. இவை அழுகிய நிலையில் அப்பிரதேசமெங்கும் துர்நாற்றம் வீசத் தொடங்கியது. மேற்படி மீன்களை நகர சபை நிர்வாகம் உழவு இயந்திரங்கள் சகிதம் அப்புறப்படுத்தத் தொடங்கின. இந்நிலையில் உட்துறைமுகக் கடல் வலயத்தில் தொழில்புரியும் மூன்று மீனவசங்கங்களின் உறுப்பினர்கள் இறந்த மீன்களை அகற்றும் பணியிலும், துப்புரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டனர்.

இதற்குத் திருகோணமலை நகராட்சி மன்றம் துணைபுரிந்ததோடு 'யு.எஸ்.எயிட்' நிறுவனம் அனுசரணையும் வழங்கியது.

கடந்த 11 ஆம் திகதி மேற்படி நிறுவனத்துடன் இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் உவர்மலை கடலரசி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கஸ்தூரி நகர மீனவர் கூட்டுறவுச் சங்கம், அர்ச் சூசையப்பர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் என்பன கலந்துகொண்டன.

அப்போதைய தீர்மானத்தின் பிரகாரம் கடந்த 12ஆம் திகதி முதல் கரையோரம் மற்றும் கடலோரப் பகுதிகளில் மீன் அகற்றும் பணிகள் ஆரம் பிக் கப்பட்டன. தொடரும் இப்பணிகள் தேர்தலை முன்னிட்டு இன்றும் நாளையும் நிறுத் தப்படும்.

இப்பணிகளுக்காக பாத அணிகள், கையுறைகள், மழைக்கவசம், சவள்கள், அத்தாங்குகள் எனப் பல பொருள்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன.

பணிகளை கடலரசி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ச. யோகேஸ்வரன் முன்னெடுத்துச் செல்கிறார் என அதன் செயலர் ச.அருள்நந்தி தெரிவித்தார்.

இதற்கென வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதோடு வேலைகளை நெறிப்படுத்தும் பணியில் பொது சுகாதாரப் பரிசோதகர் செந்தில்நாதனும் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அழுகிய மீன்கள் அகற்றப்பட்டு வருவதில் கரையோரப் பிரதேசத்துள் தற்போது துர்நாற்றம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது.(க)



திருகோணமலைக் கடற்கரையில் இறந்து அழுகிய நிலையில் கரையொதுங்கி, துர்நாற்றம் வீசும் மீன்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்போரைப் படத்தில் காணலாம்.

உலட
தாக்குவத,

உலமாக்களின்
நிந்தவூரைச் சேர்ந்த
நேற்றுமுன்தினம் சிலா
எனத் தெரி விக்கப்படுகிறத

அப்பிரதேசவாசிகள் தா
எனத் தெரிவிக்கப்படுவோரை வி
உலமாக் கட்சி அங்கத்தவர் மௌ
துல் றஃமான் ஆபத்து ஏதும் இ
பாற்றப்பட்டார் என அக்கட்சித் த
தெரிவித்தார்.

எமது கட்சியின் அங்கத்தவர் மெ
யைத் தாக்கவந்தோர் முஸ்லிம் காங்
ஆதரவாளர்கள்தான் எனவும் அக்கட்
தலைவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சம்மாந்துறை பொ
ஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனினும், தாக்கவந்தோர் எனத் தெரிவிக்கப்படுவோரைத் தாம் மன்னித்து விடுகிறார் என மௌலவி அப்துல் றஃமான் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார் எனவும் அவரது கட்சித் தலைவர் தெரிவித்தார். (க)

# மஹிந்த ஜனாதிபதியானால் 2 வாரங்களில் அமைதிப் பேச்சாம்

கொழும்பு, நவ.17

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் இருவார காலத்தில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படும். ஜே.வி.பி. இதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறது. இவ்வாறு அமைதிப் பேச்சுகள் ஆரம்பிக்கப் படாவிட்டால் நான் எனது முழுமையான ஆட்சேபனையையும், எதிர்ப்பினையும் தெரிவிப்பேன்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் 'உதயனுக்கு'க் கருத்துத் தெரிவித்தார் வர்த்தக, பாவனையாளர் பாதுகாப்பு விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. எதிர்வரும் தேர்தல் தொடர்பில் நேற்று கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

அமைதி முயற்சிகள் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்படும். பிரதமர் மஹிந்த ஜனாதிபதியானவுடன் சமாதானப் பேச்சுகள் இரண்டு வாரகாலத்தில் ஆரம்பிக்கப்படும். இதற்கு ஜே.வி.பி. முழு சம்மதம் தெரிவித்துள்ளது. அதற்கான ஏற்பாடுகளையும் நாம் செய்திருக்கிறோம். இனி சமாதானப் பேச்சுகளை நாம் இழுத்தடித்துக் கொண்டிருக்க முடியாது. வெகுவிரைவில் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுத்து மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அமைதி முயற்சிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படாவிட்டால் நான் அதற்கு முழுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பேன். தேவைப் படின் முக்கிய தீர்மானங்களையும் எடுப்பேன்.

-இவ்வாறு கூறினார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. (க)

## பொருள்கள் ஏற்றி இறக்கும் பணிகள் இன்று இல்லை

தேர்தல் தினமான இன்று வியாழக்கிழமை முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் பொருள்கள் ஏற்றி இறக்கும் பணி நடைபெறாது என்று தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இன்றையநாளைக் கரிநாளாக அனுஷ்டிக்குமாறு அனைத்துப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது என்றும்-

நாளை வெள்ளிக்கிழமை முதல் வழமை போல் பொருள்கள் இறக்கி ஏற்றும் பணி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி மேலும் பல அமைப்புகள் அறிக்கை

இன்று நடைபெறுகின்ற ஸ்ரீலங்காவின் 5ஆவது ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கோரி மேலும் பல பொது அமைப்புகள், மன்றங்கள், தொழிற் சங்கங்கள் என்பன அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

-இவ்வாறு வெளியிடப்பட்ட அறிக்கைகள் நேற்று இரவு வரை உதயனுக்கும் கிடைத்தவண்ணமிருந்தன.

இன்றைய தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டியதன் அவசியம், அதன் நியாயப்பாடு என்பன குறித்து அந்த அறிக்கைகளில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன.

காலங்காலமாக சிங்களத் தலைமைகள் தமிழ் மக்கள் தொடர்பாகக் கொண்டிருந்த நிலைப்பாடுகளும் அதனால் தமிழர்கள் அனுபவிக்க நேர்ந்த கொடுமைகளும் அந்த அறிக்கைகளில் விலாவாரியாக விவரிக்கப் பட்டிருந்தன. இந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதால் தமிழ் மக்களுக்கு ஏற்படக் கூடிய சர்வதேச அனுகூலங்கள் குறித்தும் மேற்படி அறிக்கைகள் கோடிகாட்டியிருக்கின்றன.

யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய பாதுகாப்பு இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் தாயகப் பிரதேசத்தை இன்னோர் நாடாக ஆக்கிரமித்துக்கொண்டும் அவர்தம் குடியிருப்புகளை, வாழ்வியல் ஆதாரங்களை, அடிப்படை உரிமைகளைக் கபளீகரம் செய்து கொண்டும் தமிழர் பிரதேசங்களை இராணுவமயப்படுத்தியவாறு அப்பிரதேசங்களில் தேர்தலும் வாக்களிப்பும் நடத்துவது ஒரு அரசியல் விபச்சாரம்.

இம்மனித உரிமை மீறலைத் தன்மானமுள்ள தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். வாக்குரிமை தனிமனித சுதந்திரம் என்று கூறுவோம். அத்தமிழரின் சுதந்திர சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்தார்களா? பௌத்த - சிங்கள - பேரினவாத நலன்சார் ஆட்சிக்கும், தமிழர் வாக்குரிமைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதே எம் தமிழர் தீர்ப்பு.

தமிழர் விரோதக் கொள்கைகளை முன்வைத்துக் களமிறங்கி வெற்றி பெறும் வேட்பாளர்களில் ஜனாதிபதியாக எவர்வரினும் நாம் வாக்களிக்கும் பட்சத்தில் அவர்தம் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களாவோம். எம்மீது தொடரப் போகும் அக்கிரமங்களுக்கு நாமே ஒப்புதல் கொடுத்தவர்களாவோம். அது எமது தற்கொலைக்கு ஒப்பாகும்.

' ஆக, ஸ்ரீலங்காவில் ஜனாதிபதித் தேர்தலிலிருந்து தமிழர்தாயகத்தினர் ஒதுங்குவதே சிறப்பு. இதன் மூலம் தமிழரின் சுயாட்சி நகர்வுக்கும் சிங்கள தேசத்தின் அரசியலுக்கும் தொடர்பு ஏதுமில்லையெனச் சர்வதேசத்திற்கு நீதியான இச்செய்தியைச் சொல்வதாக அமையும்.

தமிழர்களின் வாக்குகளைத் தேர்தல் காலங்களில் பெற்று மாறிமாறி ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள், தமிழரின் ஆட்புல, பிரதேச, பொருளாதார, வாழ்வியல் இருப்புகளை அபகரித்துக் கொண்ட செய்திகள் மறக்கற்பாலது.

மகாவலித் திட்டத்தின்கீழ் பதவியா முதல் பொலன்னறுவை உள்ளிட்ட கல்லோயா வரையான தமிழரின் விவசாய நிலங்கள் பறிக்கப் பட்டன. மணலாறும் அதைச் சார்ந்த கடற்கரையை அண்டிய பிரதேசங்களும் அம்பாறை, திருகோணமலை எனத் தமிழரின் பூர்வீக நிலங்களும் திட்டமிட்ட முறையில் பறிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றப் பிரதேசங்களாயின.

பல்லினமத, மொழி என்ற அடிப்படை உண்மையை மறைத்துச் ''சிங்கள பௌத்த நாடு'' என்றும் ''சிங்களம்மட்டும்'' என்றும் சட்டங்களை உத்தியோகபூர்வ வரைவுகளாக்கி ஏகாதிபத்தியச் சிந்தனைகளைக் காலத்துக்குக்காலம் வளர்த்துக் கொண்டது இச்சிங்கள அரச,

1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசயிலமைப்பில் தரப்படுத்தல் முறை மூலம் படித்த இளைய தமிழ்த் தலைமுறை ஓரங்கட்டப்பட்டது. 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளியது.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைப் பிரகடனங்களுக்கு ஆப்பு வைக்கப்பட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கைகள் மூலம் தமிழர் மீது பொருளாதார அடக்கு முறை கட்டவிழ்த்து விடப் பட்டது. தமிழர் களின் வாக்குப்பலத்தால் ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழர் விரோதச் சட்ட வரைபுகளை இயற்றித் தமிழரை வதைப்பது வேடிக்கையானதல்ல; விபரீத விளைவுகளுக்கு வித்திட்ட ஒன்று.

சிங்கள பௌத்த பேரினவாதத்தில் ஊறி நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகளின் உதவியோடு 1955, 1965, 1971, 1977,1983 ஆகிய ஆண்டுகளில் அரசின் ஆள்கள் தொடக்கி வைத்த இனக்கலவரங்களின்போது அஹிம்சை வாழ் அப்பாவித் தமிழர்கள், சர்வதேச மேலாளர்கள் பணி மையங்கள் கொண்ட கொழும்பிலும் அதனை அண்டிய சிங்களப் பிரதேசங்களிலும் பல நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டு பல்லாயிரக்கணக்கில் பால், வயது வேறுபாடின்றிச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள், பொருளாதாரத்தைப் பறிகொடுத்து நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டு வந்துள்ளனர்.

மேலும் இச் சிங்கள அரசுகள் தமிழரின் தாயகப் பகுதிகளிலும் அவ்வப்போது பயங்கரவாத ஒழிப்பு என்ற நடவடிக் கைகளை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கொலை செய் ததும் வாழ்வியல் பொருளாதாரங்களை அழித்து ஏதிலிக ளாக்கி, அகதிகளாக்கி இரண்டாந் தரப் பிரஜைகள் என்ற மாயையைத் தோற்றுவித்தும் வந்துள்ளன.

கொக்கட்டிச்சோலை, குமரபுரம், செம்மணி, நாகர் கோவில், குருநகர், சென்பீற்றர்ஸ் தேவாலயம், வெலிக்கடைப் படுகொலைகளும் வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன், ரிவிரெச,ஜெயசிக்குறு என எம் மண்ணில் கொட்டிய குண்டுகளும் சிதைந்த வாழ்விடங்களுடன் மனித உடல்கள் காவு கொள்ளப்பட்ட உயிர்களென அப்பாவித் தமிழர்கள் 80 ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள்.

இராணுவத்தின் பாலியல் வல்லுறவுக் கொடுமைகளால் கிருஷாந்தி, ரஜனி, சாரதாம்பாள், கோணேஸ்வரியென 5 ஆயிரம் பெண்கள் சிதைத்தழிக்கப்பட்டார்கள். 5 லட்சம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. பதிலாக இப்படி ஓர் அனர்த்தத்தைச் சிங்களப் பிரதேசத்தில் தமிழரோ, விடுதலைப் புலிகளோ மேற்கொண்டார்களா?யார் பயங்கரவாதிகள்? சிறுபான்மைச் சமூகத்தின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் பெரும்பான்மையென்னும் அரசியல் சித்தாந்தத்தால் சட்ட வரைபுகளால் மூடி மறைக்கப்பட்டன. ஒரு நாட்டின் ஜனநாயகம் பயங்கரவாதம் என்பதே இது தான். எனவேதான் இத்தேர்தலையும் புறக்கணிப்போம்; தேர்தல் பணிகளையும் வெறுப்போம். தமிழீழத் தேசியத்தின் விடுதலைக்குத் தலைமையின் வழிகாட்டலில் விடியலை நோக்கி நகர்வோமாக.அப்போது மனிதனின் பிறப்புரிமையான சுதந்திரத்தின் பயனையே அடையலாம்.

## ஏனைய அமைப்புகளும்

வலிகாமம் வாழ்மக்கள், யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர் பாஷாஹாஜியார்,யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக தமிழ்மாணவர் ஒன்றியம்,புங்குடுதீவு சனசமூக நிலையங்களின் ஒன்றியம், அல்லைப்பிட்டி விவசாய சம்மேளனம், அல்லைப்பிட்டி புனித பிலிப் கடற் றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், அல்லைப்பிட்டி வாகீசர் சனசமூக நிலையம்,அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளை யாட்டுக்கழகம், கொக்குவில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம், யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சமாசங்களின் சம்மேளனம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்-

யாழ். மாவட்ட வெண்மை வாணிபர் சங்கம்,யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,எம். ஜி.ஆர். முன்னேற்றக்கழக யாழ். மாவட்டக் கிளை நிறுவனம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம்,பேரிகை சமூக, கலை, இலக்கியப் பங்காளிகளுக்கான அமைப்பு கிளிநொச்சி,புங்குடுதீவு பொது அமைப்புகளின் ஒன்றியம், பருத்தித் துறைசாலை போக்குவரத்து ஊழியர் சங்கம்.

(த-203-ரி- 70-14-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செல்லாத சிறுவருக்கு கல்வியறிவூட்டுவதற்கு நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாடசாலை செல்லாத சிறுவர்களுக்கு கல்வி வழங்க கல்வி வலயத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பாடசாலை செல்லாத சிறுவர்கள் உள்ள பகுதிகள் இனங்காணப்பட்டு அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கட்டாயக் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டாயக் கல்விக் குழுவில் பாடசாலை அதிபர், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பழைய மாணவர் இருவர், ஆசிரியர்கள் இருவர், வலய உத்தியோகத்தர் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

இவர்களில் அதிபர், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகியோருக்கான கருத்தரங்குகள் அந்தந்தப் பாடசாலைகளில் நடத்தப்பட்டுவருகின்றன.

வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) செ. உதயகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்வி) த.பாலசுந்தரம் ஆகியோர் இக் கருத்தரங்குகளை நடத்துகின்றனர்.

இதேவேளை, பாடசாலை செல்லாத 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்டவர்களின் கல்வி நிலைபற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மாணவர்களின் பெற்றோருக்கும் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# ஏழாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.17

ஒரு வீட்டில் வசித்த இரு குடும்பங்களின் நகைகளும், பணமும் கடும் மழை பெய்த நள்ளிரவில் திருடப்பட்டன.

இச்சம்பவம் கடந்த 9ஆம் திகதி நள்ளிரவு ஏழாலை தெற்கு - விழிசிட்டி மயிலங்காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இரு குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவேளை கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் நகைகளையும், பணத்தையும் திருடிச் சென்றனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ-185)



தெல்லிப்பழை ஸ்ரீ ரங்கன் முன்பள்ளி விளையாட்டு விழாவுக்கான பரிசில்களை தெல்லிப்பழைப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் வழங்கியது.

நிலையத் தலைவர் செ.செல்வநேசன், பரிசில் பொருள்களை முன்பள்ளி ஆசிரியையிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: ஏழாலைச் செய்தியாளர்)

# ஜி.ரி.சற் உதவியுடன் அபிவிருத்தித் திட்டம்

தென்மராட்சி, நவ.17

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் தென்மராட்சியில் நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் 60 வீடுகளும் கரம்பைக் குறிச்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பொது நோக்கு மண்டபமும், மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு கட்டடம் , கிணறு மலசலகூடம் ஆகியவையும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சரசாலை தெற்கில் 14 வீடுகளும் கல்வயல் பிரிவில் 14 வீடுகளும், எழுதுமட்டுவாழ் வடக்குப் பிரிவில் 22 வீடுகளும், கோவில் குடியிருப்பு பிரிவில் 10 வீடுகளும் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# சுயதொழில் முயற்சிக் கடனுதவி

வலி.தென்மேற்கு,நவ.17

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கிய நிதியிலிருந்து 40 பேருக்கு சுய தொழில் முயற்சிக் கடனாக தலா 5 ஆயிரம் ரூபாவை கடந்த வாரம் வழங்கியுள்ளது. விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய சுயதொழில் முயற்சிகளுக்காக இக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

(ஓ-135)

# பரிசாரகர்களுக்கான பரீட்சை; யாழ். மாவட்டத்தில் 46 பேர் சித்தி

வலி.தென்மேற்கு.நவ.17

யாழ்.மாவட்டத்தில்பரிசாரகர்களாகப் பயிற்சி பெற்றவர்களுக்கு யாழ்.சுகாதார திணைக்களத்தில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்ட பரீட்சையில் 46 பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத்திணைக்கள நிறுவனங்களிலும் சிற்றூழியர்களாகக் கடமையாற்றியவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 48 பேருக்கு பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் மூன்று மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டது. இவர்களுக்குப் பயிற்சி முடிவில் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளே தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இதில் சித்தியடைந்த 46 பேருக்கும் பரிசாரகர் பதவி உயர்த்தப்பட்ட கடிதம் விரைவில் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு அரசினர் வைத்தியசாலையிலுள்ள பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களுக்கு இவர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என்று யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-135)


# நிகழ்ச்சித் திட்ட உதவியாளருக்கு கடமைப் பட்டியல் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளில் நிரந்தர நியமனம் பெற்றுக்கடமையாற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கு கடமைப்பட்டியல் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு வேதனம் வழங்கப்பட்டுவருகின்ற போதிலும் கடமைப்பட்டியல் மற்றும் அவர்களுக்குரிய தளபாடவசதி பல சபைகளில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




இதேவேளை- குறிப்பிட்ட சில உள்ளூராட்சி சபைகளில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு வேதனம் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (ஓ-185)

# பருத்தித்துறை புனித நகரில் மழையினால் வெள்ள அபாயம்

வடமராட்சி,நவ.17

பருத்தித்துறை புனிதநகர் கிராமத்தில் தற்போது பெய்துவரும் மழையால் வீடுகளுக்குள் வெள்ளம் புகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இக் குடியேற்றக் கிராமத்துக்குச் செல்வதற்கென புதிதாக அமைக்கப்பட்ட வீதி வெள்ளத்தில் கரையுண்டு சேதமடைந்துள்ளது. வீடுகளின் முற்றங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளது. கடும்மழை பெய்யும் பட்சத்தில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துவிடும் என குடியேற்றவாசிகள் அச்சம் தெரிவித்தனர்.

இதேவேளை, அக்கிராமத்துக்குச் செல்லும் வீதியில் ஆனைவிழுந்தான் பகுதியில் கொட்டப்பட்ட கழிவுகள் வெள்ளத்தில் மிதப்பதுடன், ஈரமடைந்த கழிவுப் பொருள்களிலிருந்து மேலும் துர்நாற்றம் வீசத்தொடங்கியுள்ளது. துர்நாற்றத்தினால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் கிராம மக்கள் [illegible] சிரமங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். (ஓ-173)

# யாழ். நகர வாய்க்கால்களில் நீர்தேங்கி நுளம்புப் பெருக்கம்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள வீதி வாய்க்கால்கள் பல துப்புரவு செய்யப்படாமையினால் தற்போதைய மழையின்போது கழிவு நீர் தேங்கியுள்ளது

இதனால், சுகாதாரச்சீர்கேடு நிலவுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி வாய்க்கால்களில் குப்பை கூழங்கள் குவிந்து காணப்படுகின்றன. மழை பெய்யும்போது இதனால் வெள்ளநீர் வழிந்து ஓடமுடியாமல் தேங்குகிறது. இதனால் சுகாதாரச் சீர்கேடு குறிப்பாக நுளம்புப் பெருக்கம் ஏற்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(ஓ-14-190-185)

# நாய்ச் சண்டையை விலக்கியவர் கொட்டன் அடிக்கு இலக்கானார்!

தென்மராட்சி,நவ.17

கட்டாக்காலி நாயுடன் சண்டையிட்ட தனது வளர்ப்பு நாயைப் பி ்க்கச் சென்ற குடும்பஸ்தர் கொட்டன் அடிக்கு இலக்காகித் தலையில் காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

இவர் வளர்ப்பு நாயைப் பிடிக்க முயற்சித்த சமயம் மற்றைய நாய்க்கு இவரது மகன் கொட்டனால் அடித்தார் என்றும் - அப்போது கொட்டன் அடிதவறுதலாக இவரின் தலையைத் தாக்கி காயமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

(ஓ -117)

# பாடசாலையின் பொன்விழா

தென்மராட்சி, நவ.17

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும் கலந்துகொண்டனர்.

வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூல்நிலையக் கட்டடமும் வெளிநாடொன்றில் தங்கியுள்ள பழைய மாணவர் ஒருவரால் 65 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடமும் முதன்மை விருந்தினரால் அன்றையதினம் திறந்துவைக்கப்பட்டன. (ஓ-117)



நல்லாசிரியர் விருதுபெற்ற புங்குடுதீவு மகாவித்தியாலயப் பிரதி அதிபர் ச.கணேஸ்வரனைக் கௌரவிக்கும் நிகழ்வில் பாடசாலை அதிபர் க.தர்மகுணசிங்கம், பிரதி அதிபருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: புங்குடுதீவுச் செய்தியாளர்)

# மானிப்பாய் பிரதேச சபையில் ஆளணிப் பற்றாக்குறையால் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ்.17

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதால் கடமைகளை நிறைவேற்ற முடியாதுள்ளது என்று மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

பிரதேச சபையில் எழுதுநர் தரத்திலும், முகாமைத்துவ சேவை தரத்திலும் இருந்த அரச அலுவலர்கள் 6 பேர் இடமாற்றம் பெற்றும் ஓய்வு பெற்றும் பணியிலிருந்து விலகியுள்ளனர்.

இடமாற்றம் பெற்றுச் சென்று அலுவலர்களின் இடத்திற்கு பதிலிட்டு அலுவலர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இதனால் தலைமை அலுவலகம் மற்றும் நான்கு உப-அலுவலகங்களிலும் கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- கணக்குப் பகுதிக்கு மூன்று நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களும் (நிதி), திட்டமிடற் பிரிவிற்கு இரண்டு பொது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களும் நியமனம் பெற்றுள்ளனர்.

எனினும்- பிரதேச சபையில் பட்டதாரி அலுவலர்களையும், ஏனைய பயிலுநர்களையும் இடமவர்த்துவதற்குப் போதுமான இடவசதி இல்லாமை பெருங்குறையாக உள்ளதாகவும் கூறப்பட்டது. (ஓ-185)

# மானிப்பாய் பகுதி ஆதனங்களுக்கு விலை மதிப்பீடு செய்யத் திட்டம்

யாழ்ப்பாணம்,நவ.17

மானிப்பாய் உப அலுவலகப் பகுதியில் உள்ள ஆதனங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்று மானிப்பாய் பிரதேச சபை அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் கிராம உப அலுவலக பகுதியில் உள்ள ஆதனங்கள் நீண்டகாலமாக அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களம் ஊடாக மதிப்பீடு செய்யப்படவில்லை.

இதனால் மானிப்பாய் பிரதேச சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக அக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதுகுறித்து யாழ். அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்படவேண்டும் எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் இடம்பெற்ற பிரதேச [illegible] மானிப்பாய் கிராம அலுவலகத் திற்குட்பட்ட ஆதனங்களின் மதிப்பீடு மிக குறுகிய அளவிலேயே மதிப்பிடப்பட்டு அதற்கான ஆதன வரி அறவிடப்படுகிறது என்றும் விரைவில் அரசாங்க அதிபருடாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு-2006ஆம் ஆண்டில் இருந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விலை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - சபை செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார். (ஓ-185)

# வீதியில் குவித்த மண்ணால் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.17

வீதியைத் திருத்தியமைக்கும் நோக்கில் குவிக்கப்பட்ட மண்ணால் அந்த வீதியில் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமமேற்பட்டுள்ளது.

கொய்யாத்தோட்டம்,புது வீதியே இக்கதிக்குள்ளாகியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் இருந்து வந்த இந்த வீதியைத் தாமே திருத்தி அமைக்கும் நோக்கில் அவ்வூர் இளைஞர்களின் முயற்சியில் மண் பறிக்கப்பட்டது.

மண்பறிக்கப்பட்டு 2 மாதங்களுக்கு மேலாகியும் அந்த மண் பரவி செப்பனிடப்படாத நிலையிலேயே இருந்துவருவதால் போக்குவரத்தில் சிரமம் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (ஓ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்களிப்பு நிலையம் மாற்றம்

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக ஊர்காவற்றுறை செண்.மேரிஸ் மகளிர் வித்தியாலய மண்டபம் 4,5,6,7 இற்கு மாற்றப் பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் முறையே ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபம் 1, 2,3,4 இற்கு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-202)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 01 - 1943



உதிர்வு 02 - 12 - 2001

### துரையப்பா நவரட்ணம்

(முனீஸ்வரன் கராஜ் உரிமையாளர்)

பார்க்கும் இடமெல்லாம் உங்கள் உருவம்
கேட்கும் ஒலியும் உங்கள் ஒலியே!
நாம் பாரினில் உள்ள வரை
எமை விட்டு கலையாது
உங்கள் நினைவு

இல.11, 2ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை. (42874)(26-19-46) -குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 12 . 1922



உதிர்வு 27 . 11 . 2004

அமரர்
### வல்லிபுரம் குருசாமி (கலைச்சுடர்)

திதி 17.11.2005

ஆண்டு ஒன்று ஆனதய்யா- எம்
மனவேதனை இன்னும் ஆறவில்லை
யார்தான் இருந்த போதும் - உங்கள்
பாசம் போல் கிடையாதய்யா!
என்றும் உம் நினைவுகள் எம்மோடு வாழுமைய்யா!

நீர்வேம்பனை,
மல்லாகம். (42855)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சிவமயம்
## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் கார்த்திகை மாதம் 3 ஆம் நாள் (18.11.2005) வெள்ளிக்கிழமை திருதியை திதியும், மிருகசீரிட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 8.57 மணி முதல் 9.40 மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.சோ.சத்தியநாதன்,
திருமதி ச.வரதாதேவி
தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன்
**சுகந்தன்**

திரு.இ.தர்மலிங்கம்,
திருமதி த.செல்வராணி
தம்பதிகளின் புத்திரி திருநிறைசெல்வி
**அனுஷா**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு [illegible]க்கம் கலாசார மண்டபத்தில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

தாமோதரம்பிள்ளை பவளக்கொடி
குடும்பத்தினர்.
பழனியாண்டவர் ஒழுங்கை,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

திரு.திருமதி இ.தர்மலிங்கம்
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(42890)(39-26-34-46)

(இருவீட்டார் அழைப்பு)

## மகாலக்சுமி றியல் எஸ்டேட்
### வீடு, காணி வாங்கலும் விற்றலும்

தொ.பே.0773583880, 0776066889,021 2263395
கே.கே.எஸ்.றோட், வல்வெட்டித்துறை.

எமது ஸ்தாபனம் கீழ்வரும் வேலைகளை நீங்கள் விரும்பும் நவீன டிசைனில் உங்கள் திருப்திக்கமைய நீங்கள் குறிப்பிடும் தவணையில் எம்மிடம் தொழில் புரியும் அனுபவம்மிக்க பொறியியலாளர், நிலஅளவையாளர், சட்டத்தரணிகளின் மேற்பார்வையுடன் நிறைவேற்றித் தரப்படும்.

1. கட்டடங்கள் புதிதாக நிர்மாணித்தல்
2. கட்டடங்கள் திருத்தம் செய்தல்
3. காணிகள், வீடுகள் வாங்கல், விற்றல்
4. வாகனங்கள் வாங்கல், விற்றல்
5. திருமணங்கள் ஒழுங்கு செய்தல்

கட்டட, காணி ஒப்பந்தகாரர் உங்கள் வசமுள்ள காணிகள், கட்டடங்களை எமது ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். திருமண ஒப்பந்தகாரரும் உங்கள் ஜாதகக் குறிப்புகளை எமது காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

உரிமையாளர்கள்
V.A. தங்கமயில் ( நில அளவையாளர்)
N. சிவபாலி, K. மணிவண்ணன் (சி/46241)(26-19-46)

## மரண அறிவித்தல்



### திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி

மூளாய் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி 15-11-2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-11-2005) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
மூளாய். (42887)(26-19-46)

தகவல்:
சு.புஸ்பநாதன்
(முருகா - மகன்)

## 17.11.1999 அன்று கல்விச்சுற்றுலாவின்போது இன்பருட்டி கடலில் கலந்துவிட்ட ஹாட்லியின் மைந்தர்களின்

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்



சிவநாதன் ரவிசங்கர்
02.02.1981



பாலகிருஷ்ணன் பிரதீபன்
17.04.1981



பூரணமூர்த்தி கந்தர்வன்
11.05.1981



சுந்தரலிங்கம் சிவோத்தமன்
23.03.1981

நீங்கள் இன்றிருந்தால் என்று ஏங்கி
கற்பனையில் மூழ்கிமூழ்கித் தேடி.
நீங்கள் இல்லையென்ற நிஜத்தின் - தகிக்கும்
வெறுமையில், கரையொதுங்குகிறோம் தினமும்!

(42560)

பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.


## மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி,நவ.17

வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த மாடு வீதியின் குறுக்கே ஓடியதால் அதன் கயிற்றில் சிக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் அல்லாரைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம், நீராவியடியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜனார்தனன் (வயது 28), நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சிவறஞ்சன் (வயது 23) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் சாவச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-117)

## தேர்தலில் வாக்களிக்க மலையக இளைஞருக்கு விடுமுறை வேண்டும்

கொழும்பில் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் மலையகத் தமிழ் இளைஞர், யுவதிகள் நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வசதியாக அவர்களுக்கு இன்று விடுமுறை வழங்குமாறு தொழில் அதிபர்கள் வேண்டப்பட்டுள்ளார்கள்.

இந்த வேண்டுகோளை கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சியின் எம்.பி.யான தி.மகேஸ்வரன் விடுத்துள்ளார்.

கொழும்பில் எழுபதாயிரத்திற்கும் கூடுதலான தமிழர் ஊழியர்களாக பணிபுரிகின்றனர். இது தமிழர் வாக்கைப் பொறுத்தவரை பெரும் தொகையாகும்.

அதனால், தமது வியாபார நிலையங்களில் கடமை புரியும் தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் வாக்களிக்க இடமளிக்குமாறு மகேஸ்வரன் எம்.பி. தொழில் அதிபர்களைக் கோரியுள்ளார்.

தீபாவளிக்காக விடுமுறை வழங்கியதைக் காரணம் காட்டி, ஊழியர்களை வாக்களிப்பு தினத்தில் தடுத்துவைத்துக் கொள்ளாது, இத்தேர்தலில் தமிழரின் பங்களிப்பையும், பங்குபற்றலையும் வரலாற்றுக் கடமையாகக் கருதி தமது ஊழியர்களுக்கு முடியுமாயின் கொடுப்பனவுடன் கூடிய விடுமுறை வழங்குமாறு அவர் தொழில் அதிபர்களை வேண்டியுள்ளார்.

## வலி.கிழக்கில் பாதீனியம்

அரியாலை,நவ.17

தற்போது பெய்து வரும் மழையை அடுத்து வலி.கிழக்குப் பிரதேசத்தில் பாதீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய், நீர்வேலி போன்ற விவசாய நிலங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் பாதீனிய களைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

தற்போது பெய்து வரும் மழையை அடுத்தே இக்களைகள் அதிகரித்திருக்கின்றன என்று விவசாயிகள் தெரிவித்தனர். (த-17)

## பாஷையூர் சந்தையில் மீன்விலை அதிகரிப்பு

அரியாலை,நவ.17

பாஷையூர் மீன் சந்தையில் மீனின் விலை கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளது.

சந்தைக்கு வரும் மீன்களை வியாபாரிகள் அதிகளவில் கொள்வனவு செய்து கொண்டு செல்வதால் மீன் விலை அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களுக்கும் தேர்தலில் ஆர்வமில்லை

## முகமாலை, ஓமந்தை கொத்தணிச் சாவடிகளில் வாக்களிக்கும் வசதிகளைச் செய்வதில் மும்முரம்!

கிளிநொச்சி,நவம்பர்17

**இன்று நடைபெறுகின்ற ஸ்ரீலங்காவின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலை வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள மக்கள் பெரும்பாலும் முற்றாகப் புறக்கணிப்பார்கள் என்று தெரிகிறது.**

**வன்னியில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை; அதைப்பற்றி அவர்கள் அலட்டிக்கொள்ளவில்லை என்று அங்குள்ள 'உதயன்' செய்தியாளர்கள் தெரிவித்தனர்.**

**இதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கென ஓமந்தையிலும் முகமாலையிலும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.**

வடக்கு - கிழக்கில் தமிழ்மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து தமிழின ஒற்றுமையை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று பொது அமைப்புகள் தீர்மானித்திருக்கின்றன. அந்தத் தீர்மானத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் வன்னியிலுள்ள பொது அமைப்புகள், மன்றங்கள், தொழிற் சங்கங்கள் என்பனவும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வெகுஜன அமைப்புகள் கடந்த 15 ஆம் திகதி ஒன்று கூடி தேர்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுத்தனர். பின்னர் மாவட்ட வெகுஜன ஒன்றியம் அறிக்கை வெளியிட்டது.

தேர்தல் தினத்தன்று தமிழ்பேசும் மக்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பதையும் தமிழ் உத்தியோகத்தர்கள் வாக்குச் சாவடிகளில் கடமையாற்றுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் ஒன்றியம் கேட்டிருக்கிறது.

தமிழ்மக்களுக்கென்று தனியானதொரு தலைமைத்துவம் உள்ளது. இந்த நிலையில் காலங்காலமாக தமிழ் மக்களை அடக்கி யாண்டுவரும் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டிய தேவை இல்லை என்று கிளிநொச்சியிலுள்ள வடக்கு - கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் பணிப்பாளரான அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார். தமிழர்களுக்கென்று தாயகம், தேசியம், சுயநிர்ணயம் உண்டு என்பதை எந்த வேட்பாளர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே தமிழர்கள் எவருக்கும் வாக்களிக்கக் கூடாது என்றும் அவர் கூறியிருந் தார்.

இவ்வாறே வன்னியில் உள்ள பல்வேறு அமைப்புகளும் பிரமுகர்களும் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி தமது கருத்துகளை வெளியிட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் வன்னியிலுள்ள மக்கள் இன்றைய தேர்தலில் வாக்களிப்பது குறித்து அக்கறை கொள்ளவில்லை. மக்கள் எவரும் தேர்தலைப் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - தேர்தலைப் பகிஷ்கரித்து அதற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வன்னியிலும் இன்றைய தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க மக்கள் தீர்மானித்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த)

### ஆவணம் பெறுவது குறித்து பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி,நவ.17

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் டி.ஆர்.சி. நிறுவன நிதியுதவியுடனும் பட்டிக்குடியிருப்புக் கிராமத்தில் ஆவணம் பெறுவது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பட்டிக்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொது நோக்கு மண்டபத்தில் இப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

பிறப்பு, இறப்புப் பத்திரம், திருமணச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றைப் பெறுவதற்கான நடைமுறைகள், அதன் முக்கியத்துவம் என்பவை பற்றி இப் பயிற்சிப் பட்டறையில் விளக்கம் அளிக்கப் பட்டது. (த-202)

### வீதி சேதம்

புளியங்குளம்,நவ.17

வவுனியாப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாலமுறிப்பு, மூன்று முறிப்பு வீதியில் பனிக்கங்குளத்திலிருந்து ஊறல்குளம்வரையான வீதி சேதமடைந்துள்ளமையால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமை தோன்றியுள்ளது.

இவ்வீதியால் போக்குவரத்து செய்யமுடியாமையால் மக்கள் புவிர் ஊடாகவே செல்கின்றனர். இதனால், பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால் இந்த வீதியால் பயணம் செய்யமுடியாத நிலைமை தோன்றியுள்ளது.

எனவே உரியவர்கள் மேற்படி வீதியை கவனத்தில் எடுத்து புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (த-355-203)

## சேமிப்பு தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்குப் பரிசில்

### *கிராமிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது*

பரந்தன்,நவ.17

கிராமிய அபிவிருத்தி வங்கி சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்தவர்களில் சேமிப்பு தினத்தை முன்னிட்டு குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில் வழங்கியுள்ளது.

குலுக்கல் மூலம் அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவுசெய்யும் நிகழ்வு அண்மையில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியகத்தில் நடைபெற்றது.


தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ப.சுஜன், வங்கி மேலாளர்கள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, பூநகரி, மன்னார், வவுனியா, மல்லாவி போன்ற கிளைகளில் இருந்து குலுக்கல் மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(த-352-203)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகள்



உலக உணவு விவசாய நிறுவனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 13 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 620 விவசாயிகளுக்கு விதை நெல், பசளை போன்ற விவசாய உள்ளீடுகளை வழங்கி வருகின்றது.

இது தவிர ஆயிரம் விவசாயப் பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்குரிய மரக்கறி விதைகளையும், பசளை வகைகளையும் வழங்கி வருகின்றது. மேலும் 100 பயனாளிகளுக்கு தோட்டச் செய்கைக்குரிய விதைகளையும், அதற்குரிய உரங்களையும் வழங்குகிறது. மாவட்ட உதவித் திட்ட அலுவலர் ஆ.சிவானந்தன் தலைமை வகித்து இந்த உதவிகளை வழங்கி வருகின்றார்.

ஒரு தொகை உரத்தை விவசாயிகளுக்கு அம்பலவன் பொக்கணையில் உள்ள கிராம அபிவிருத்தி நிலையத்தில் வைத்து கையளித்தபோது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.

(த-149)

### கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

## பால்பொருள் உற்பத்திக்கென 6 கோடி ரூபா செலவில் கட்டடம்

### *கனடாவில் வதியும் அன்பரின் தாராளம்*

பரந்தன்,நவ.17

புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் அன்பர் ஒருவர் பால் உற்பத்திக்கென 6 கோடி ரூபா செலவில் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கின்றார்.

புத்தூரைச் சொந்த இடமாகக் கொண்ட இந்த அன்பர் தமிழீழப் பொருண்மிய நிறுவனத்திற்கு இந்தக் கட்டடத்தைக் கையளிக்கவுள்ளார்.

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் இக் கட்டடத்தின் கட்டடப் பணிகள் பூர்த்தியாகி இயந்திரங்கள் பொருத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

தொழிற்சாலையின் திறப்பு விழா விரைவில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-352-202)



பால்பொருள் உற்பத்திக் கட்டடம்

## அங்காடி வியாபாரிகளுக்கு சுகாதார சேவை அறிவுறுத்து

கிளிநொச்சி,நவ.17

தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம் தாயகப் பிரதேசத்திலுள்ள அங்காடி வியாபாரிகளுக்கான சில அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

* பழுதடைந்த வியாபாரப் பொருள்களை எக்காரணம் கொண்டும் வியாபாரம் செய்யும் பொருள்களுடன் சேர்த்து வைத்திருத்தல் கூடாது.
* புலால் கழிவுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கூடாக காலதாமதமின்றி தினமும் அகற்ற வேண்டும்.
* வியாபாரம் செய்பவர்கள் தமக்குரிய பகுதியைச் சுத்தமாகப் பேணுதல் வேண்டும்.
* வெற்று ரின்கள், பொலித்தீன், பழுதான பிற கழிவுகளை பொது இடங்களில் போடாமல் அறிவுறுத்தப்பட்ட பைகளில் போட்டு உரிய முறையில் கழிவகற்ற உதவ வேண்டும்.

(202)

## தட்டுவன்கொட்டியில் இலவச மருத்துவ சேவை

கிளிநொச்சி தட்டுவன்கொட்டிக் கிராம மக்களின் சுகாதாரத்தைக் கவனத்திலெடுத்து அண்மையில் அங்கு இலவச மருத்துவ சேவை நடத்தப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவைகள் நிறுவனத்தினரின் ஒழுங்குபடுத்தலில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த மருத்துவ சேவை நடத்தப்பட்டது.

இதில் பற்சிகிச்சையளிக்கப்பட்டு பல் சம்பந்தமான நோய்களை ஆரம்பத்திலேயே இனங்காண்பதற்கான விபரணப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

அத்துடன் வாய்ப்புற்றுநோய், சலரோகம், குருதி அமுக்கம் போன்ற நோய்களை இனங்காண்பதற்கான பரிசோதனைகளும் நடத்தப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதேவேளை மழைகாலத் தொற்றுநோய் விழிப்புணர்வுச் செயற்பாடாகச் சுகாதாரக் கல்வியும் வழங்கப்பட்டது.

(த-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி சண்முகலிங்கம் கௌரிமாலா தம்பதிகளின் செல்வப்புதல்வி ச.யதுசிகா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (17.11.2005) கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக்கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அக்கா (மகிளினி), அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், கனடாவிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, லக்சனா மற்றும் பெரியப்பாமார், பெரியம்மா, சித்தப்பாமார், சித்தி, அண்ணாமார், அக்காமார் அனைவரும் பல் கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
பு.சுதர்சன்
மாமா.

538, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**ச.யதுசிகா**

# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார்.
வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.
❋ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம்.

**பிள்ளையார் இன்**

(42677)
அறை எண் 5, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.

# மரண அறிவித்தல்

## கந்தையா ஐயம்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 57, ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஐயம்பிள்ளை 15.11.2005 அதிகாலை காலமானார்.

அன்னார் சின்னத்தங்கச்சியின் (தையமுத்து) கணவரும் காலஞ்சென்ற கந்தையா-ஐயாத்தை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கதிர்ராசி, தெய்வானை, ஆறுமுகம், கார்த்திகேசு, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரரும் நாகேஸ்வரி, கமலேஸ்வரி, உமேஸ்வரி ஆகியோரின் தகப்பனும் கயேந்திரன், சுயிவன், கார்த்திகாயினி-கணேஷ், காயத்திரி- சாந்தகுமார், கௌதமன், அபிநயா ஆகியோரின் பேரனும் கரிஸ் இலியாஸின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2005) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்குத் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரபாகரன் (மருமகன்)
பிரபா பாமசி.

57, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். [42896] [38-14-17-42]

# நீங்காத நினைவலைகள்

ஓராண்டு — 19 ஆம் ஆண்டு



தோற்றம் 01 . 03 . 1911 — மறைவு 28 . 11 . 2004



தோற்றம் 15 . 04 . 1915 — மறைவு 06 . 07 . 1986

அமரர் கார்த்திகேசு இராசையா — திருமதி சௌபாக்கியவதி இராசையா

அன்பும் அறனும் உண்மையும் நேர்மையும்
கடமையும் கண்ணியமும் கருத்திலே கொண்டு
இல்லறமாம் நல்லறத்தில் இனிதாக வாழ்ந்து
விண்ணுலகம் எய்தி விட்ட எம் அன்புத் தெய்வங்களே
ஆண்டு ஒன்று பல சென்றாலும் ஆறாது உம் நினைவு
அன்புடனே நாம் மலர் தூவி வணங்குகின்றோம்.

"இராஜஸ்தான்"
சுதுமலை, வடக்கு,
மானிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# திருத்தம்

கடந்த 11ஆம் திகதிய 'உதயனில்' வெளியான சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் பதவி வெற்றிடம் தொடர்பான விளம்பரத்தில் பொது முகாமையாளர் பதவிக்கான பதவிக் குறியீடு 101/3 எனத் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டது.

அதனை 101/8 எனத் திருத்தி வாசிக்கவும்.

# வீதிப்பெயர்ப்பலகை திருடர்களால் சேதம்

வலி.தெற்கு,நவ.17

பண்டத்தரிப்பு - மாதகல் பிரதான வீதியில் நிறுவப்பட்டிருந்த பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியைச் சுட்டிக்காட்டும் அறிவித்தல் பெயர்ப் பலகை இரவுவேளையில் திருடர்களால் சேதமாக்கப்பட்டு, அதற்காக நாட்டப்பட்டிருந்த இரும்புக் குழாய்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்து வருட காலமாக இருந்து வரும் இந்தப் பெயர்ப்பலகை புதிதாக வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருந்துவந்தது.

கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை இரவு வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் நிதி மூலம் இந்த பெயர்ப்பலகை நிறுவப்பட்டிருந்தது. இரும்புக் குழாய்கள் வாளினால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-135)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவச் செயலமர்வு

வலி.தெற்கு,நவ.17

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ செயலமர்வு யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளன. இச்செயலமர்வு காலை 8 மணி முதல் மாலை 6மணிவரை தொடர்ந்து இடம்பெறும் என தேசிய கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்தார்.

வகுப்பறை முகாமைத்துவம், பாடத்திட்டம் வகுத்தல், பாடக்குறிப்பு எழுதல், மாணவர் தனியாள் வேறுபாடு அறிதல், ஆசிரிய விழுமியங்கள், பிரயோகக்கல்வி, உளவியல், கல்விச் சமூகவியல், கல்வித்தத்துவார்த்த வரலாற்றியல், புதிய கல்விச் செல்நெறிகள் ஆகிய தலைப்புகளில் செயலமர்வுகள் இடம்பெறும்.

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களில் ஆர்வமுடைய ஆசிரியர்கள் தாம் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை பாடசாலை அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளரூடாக இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுப்பி வைக்குமாறு உபபீடாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வுகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சினால் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-152)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



குப்பிளான் கிராமத்தின் சிறந்த சமூக சேவையாளரும் புன்னாலைக்கட்டுவன் கிராம சேவையாளருமாகிய

**இ.சி.தெட்சனாமூர்த்தி**

அவர்கள் மல்லாக நீதிமன்ற நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் 2005-11-14 இல் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் நீண்ட ஆயுள்பெற்று மக்களுக்குச் சேவை ஆற்ற இறைவனைப் பிரார்த்தித்து அவரை வாழ்த்துகிறோம்.

(42899)
(35-14-17-42)

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அ.ச.,
யா/புன்னாலைக்கட்டுவன், மகாவித்தியாலயம்.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
பொன்னுத்துரை திருவருட்செல்வி



*ஆண்டுகள் ஐந்து கடந்தன அம்மா!*
*எங்கள் அம்மா என்ற*
*வாய்ச் சொல் ஓய்ந்ததம்மா!*
*தாயே உந்தன் உறவுக்கு நிகராகுமோ!*
*தாயே எங்கள் இதய நினைவெல்லாம்*
*கனவாய்ப் போனதம்மா!*
*தாயே உம் தாய் முகத்தைக் காண*
*நாம் ஏங்குகின்றோம்*
*தாயவள் நினைவைப் பகிர்கின்றோம்*

குடும்பத்தினர்.
2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
பொ.ஸ்ரீபாலன் (மகன் -ஆசிரியர்),
No. 44/16 மணல் தரை வீதி,
கந்தர்மடம்.

(42897)(21.14.17.42)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 09 - 1932



மறைவு 17 - 11 - 1995

## அமரர் சின்னையா ஜோன்

(தோலகட்டி - வயாவிளான்)

*வருடம் பத்து ஆனதுவே*
*உங்களை நாம் பிரிந்து - ஆனாலும்*
*எக்கணமும் மாறாது எம்முடனே*
*வாழும் உங்கள் நினைவு.*

ஜோன் ஸ்ருடியோ,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (42900)(32-14-17-42)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நினைவஞ்சலி



அமரர்
**பொன்னையா கனகரத்தினம்**

மலர்வு : 08-06-1920
உதிர்வு : 16-01-2005
திதி : 03-02-2006



திருமதி
**யோகநாயகி கனகரத்தினம்**

மலர்வு : 28-12-1932
உதிர்வு : 28-11-2004
திதி : 17-11-2005

எங்கள் அன்புத் தெய்வங்களே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் அன்பு எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்:
No.174-5/7,(4th Floor) Messenger Street, Colombo-12
Tel:2399542. 0779061527

# INTERNATIONAL SCHOOL - MANIPAY — சர்வதேச கல்லூரி - மானிப்பாய்

**Opening Day January 2006**

Classes from Montessori to Grade 7
Admission forms available for Personal Callers Only
Closing Date for Applications: 30th Novermber 2005
Vacancies for Graduate Teachers and Administrato[rs]

**ஆரம்பம் தை-2006**

வகுப்புகள்: பாலர் வகுப்பு முதல் தரம் 7 வரை
அனுமதிப்பத்திரங்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன.
விண்ணப்பப்படிவங்கள் கிடைக்க வேண்டிய முடிவுதிகதி: 30.11.2005
நிர்வாக ... பட்டதாரி ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Phone No: 222 2659
021-4591983

SANGARAPILLAI VEETHY,
MANIPAY.

(42898)(42.14.17)

Director/நிர்வாகி
HUMEDICA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26 - 11 - 1928

உதிர்வு
08 - 11 - 1995



அமரர்
# இரத்தினம் சுந்தரலிங்கம்

எம் குடும்ப குல விளக்காக நீர் வாழ்ந்தீர்!
எம்மை விட்டுப் பிரிந்து நீர் எங்கு சென்றீர்!
ஆண்டுகள் பத்து சென்றிடினும்
எம்முடன் எப்போதும் நீர் வாழ்வீர்!

லிங்க வாசம்
மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில். (42908) (30-13-17) – குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 731 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 15-11-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4880760-4892060 |

வெற்றி இலக்கங்கள்
07 12 20 33

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 15,54,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,48,022 | 10/- | 24,80,220/- |
| 2.இலக்கங்கள் | 22,863 | 20/- | 4,57,260/- |
| 1.இல லக்கினம் | 22,685 | 30/- | 6,80,550/- |
| 2.இல லக்கினம் | 2,014 | 100/- | 2,01,400/- |
| 3.இலக்கங்கள் | 598 | 500/- | 2,99,000/- |
| 3.இல லக்கினம் | 63 | 5,000/- | 3,15,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 47,33,430/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 57,85,680/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 57,85,680/- தொடர் இல. 5828512 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 4890595-4-95 |
| மாத்தறை | 4882314-2-12 |
| கம்பஹா | 4884002-0-28 |
| நுவரெலியா | 4881599-7-78 |
| கேகாலை | 4890194-3-81 |


## மரண அறிவித்தல்

### திருமதி அருந்தவநாயகி ஆனந்தவடிவேல்
(மணி அக்கா)



திருநெல்வேலி, தலங்காவல்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநாயகி ஆனந்தவடிவேல் (மணி அக்கா) 14.11.2005 அன்று பிற்பகல் 5 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் அமரர் ஆனந்தவடிவேல் அவர்களின் பாசமிகு மனைவியும் அமரர்கள் அபூர்வசிங்கம், சுகிர்தரத்தினம், திருமதி இராஜேஸ்வரி, திருமதி கருணாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி அன்னபூரணம், திருமதி சரஸ்வதி, அமரர் நவரட்ணம், கந்தசாமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி நாகேஸ்வரி (பிரான்ஸ்), நாகேந்திரம் (ஜேர்மனி), திருமதி நகுலேஸ்வரி, திருமதி புஸ்பலதா (ஜேர்மனி), கணேசானந்தன் (ஜேர்மனி), ஸ்ரீலிங்கம், (ஜேர்மனி), இராசேந்திரம் (ஜேர்மனி), திருமதி சுகந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் சுஜீவன், ரையித்தா, அஜந்தா, கீர்த்திகா, நிஷாந்தன், லஷ்சன், சுதர்சன், சர்மிலா, கிருஷாந்தன், சுவிற், விதுர்சன், யூலியன், சயன், கஜன், கார்த்திகா, அனுயன், அனுஜா, அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2005) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி ஒழுங்கை,
திருநெல்வேலி. (42917)(30-13-17)
தகவல்:
குடும்பத்தினர்.

## வீண்பொழுது போக்கியோருக்கு எச்சரிக்கை

அரியாலை,நவ.17

நீர்வேலிப் பகுதி வீதியில் கும்பலாக நின்று வீண் பொழுது போக்கியவர்கள் கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்களால் எச்சரிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. நீர்வேலி கரந்தன் வீதியில் கும்பலாக நின்ற இளைஞர்களே கலாச்சாரத்தைப் பேணுவோரால் எச்சரிக்கப்பட்டனர்.

இவ்வாறு சந்திகள் மற்றும் பொது இடங்களில் கூடி நின்று பொழுது போக்குவதைக் கைவிடுமாறு கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்கள் எச்சரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி.நவ.17

தென். புலோலி சாரையடி வீரபத்திரர் கோயில் வருடாந்த கும்பாபிஷேக தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டிய விசேட பூஜைகள், அபிஷேகங்களை வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் நடத்திவைப்பார். (ஒ-173)

## தாபரிப்பு செலுத்தாத நபருக்குச் சிறை

தென்மராட்சி,நவ.17

பதினாறு மாதங்களாக தாபரிப்புப் பணம் செலுத்தாத நபருக்கு பதினைந்து மாத சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை இத் தண்டனை வழங்கப்பட்டது. (ஒ-117)

## தேர்தல் கடமையில் உத்தியோகத்தர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ். மாவட்டத்தில் திணைக்களங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர் தர உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைக்கு அழைக்கப்படாதமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு நிலையங்களில் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்படலாமென யாழ். தெரிவத்தாட்சி அலுவலரால் கடிதம் அனுப்பட்டு கடந்த நான்காம் திகதி யாழ். செயலக கேட்போர் கூடத்தில் தமக்கும் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் எனினும், தேர்தல் கடமையில் பணிபுரிவதற்கான நியமனக் கடிதம் வழங்கப்படாமல் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் உத்தியோகத்தர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் பலருக்கு வாக்கெடுப்பு நிலையத்திலும், வாக்கு என்னும் நிலையத்திலும் கடமையாற்ற நியமனக் கடிதம் அனுப்பட்டிருப்பதாகவும் இவற்றில் ஒன்றையாவது மேற்பார்வையாளர் தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (8)

## புதிய பஸ் தரிப்பிடத்திற்கு மலசல கூடம் அமைப்பு

அரியாலை,நவ.17

யாழ். முற்றவெளிப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையத்திற்கு மலசலகூடம் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அத்துடன், பயணிகளுக்கான குடிதண்ணீர் வசதியும் இங்கு ஏற்படுத்தப்படவுள்ளது. (8-17)


புதிய வீடியோ கிராபிக்ஸ் வெளியீடுகள்
Title, Background
DVD,
Software Video
Effects.
T.P. 0777 917610 (42913)(30-13-17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் கடமையாற்றும்
திருமதி
உமேஸ்வரி பிரபாகரனின்
அன்புத் தந்தையார்

அமரர்
# கந்தையா ஐயம்பிள்ளை

அவர்கள் காலமான செய்தி அறிந்து அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரில் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம், (சி-46250) (30-13-17)
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணக் கிளை.
NSB தேசிய சேமிப்பு வங்கி

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம்



காரைநகர், களபூமி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, நாவலடி பேச்சியம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் அவர்கள் நேற்று (16.11.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மாணிக்கம் தம்பதியரின் ஆசை மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி, சண்முகானந்தன், கனகராசா (இரும்புத் தொழிலகம், நாச்சிமார் கோயிலடி), கமலாதேவி, சற்குணராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாலசுந்தரம், விமலாதேவி, ஜெயராணி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமியாரும் குமாரசாமி காலஞ்சென்ற சரஸ்வதி, சுப்பிரமணியம், சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராசா, சண்முகம், குமாரசாமி ஆகியோரின் மைத்துனியும் மதியழகி, நஜிதா, பபிதா, யதுசன், அபர்ணா, லாகுலன், சுரேக்கா, சுபாஸ்கர், விதுசா, சங்கீர்த்தா, சந்தோஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23/1, நாவலடி லேன்,
பேச்சியம்மன் கோயிலடி,
வண். வடமேற்கு,
யாழ்ப்பாணம்.
T.P.: 077 6038588

தகவல்:
கனகராசா
(மகன் -கனகராசா இரும்புத் தொழிலகம், நாச்சிமார் கோயிலடி).
(42916) (30-13-17)

### திருமதி சொக்கலிங்கம் சிவபாக்கியம்



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு, பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் சிவபாக்கியம் நேற்று (16.11. 2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கத்தின் அன்பு மனைவியும் யோகேஸ்வரி (இணுவில்), கனடாவில் வசிக்கும் கனகசுந்தரம், ஜெயராசா, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அருணாசலம், (வர்த்தகர், இணுவில்), கனடாவில் வசிக்கும் தவமணி, சரோஜினிதேவி, தேவமனோகரி ஆகியோரின் அன்பு மாமியாரும் இணுவிலில் வசிக்கும் வனஜா, வனிதா, அனுசா, கனடாவில் வசிக்கும் ஜாமினி, தட்சாயினி, துவாரகன், ஜானுஜா, திசாந்தன், கிரிசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கந்தையாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2005) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் தெற்கு,
இணுவில். (42905)(30-13-17)

தகவல்:
பிள்ளைகள்
யோகேஸ்வரி (மகள்).

### சண்முகம் அருணகிரிநாதன்
(தபால் ஊழியர் - காரைநகர்)

மல்லிகை காரைநகரைப் பிறப்பிடமாகவும் பலகாடு, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் அருணகிரிநாதன் நேற்று (16.11.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம்-அன்னமுத்து தம்பதியரின் மகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் வேலுப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் சிவப்பிரியா (லேக்ஹவுஸ்), கிருஸ்ணப்பிரியா (கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு) சிவநாதன் (காரைநகர் மத்திய மகாவித்தியாலய கணிதப்பிரிவு மாணவன்), சசிப்பிரியா (யாழ்ற்றன் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவி) ஆகியோரின் தந்தையும் நந்தகுமாரனின் (வியாபாரி) மாமனாரும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், சிவராஜா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2005) வியாழக்கிழமை பிற்பகல் 1மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பலோடை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்னாலடி,
காரைநகர். (42914)(30-13-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், சகோதரன்.

# தேர்தல் மோசடி இடம்பெற்றால் உடனடியாகத் தகவல் தாருங்கள்!

## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, நவ.17

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின்போது ஏதாவது ஊழல்கள், மோசடிகள் அல்லது தேர்தல் விதிகளை மீறும் சட்டவிரோதமான சம்பவங்கள் இடம்பெற்றால் அவை தொடர்பாக உடனடியாகத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவியுங்கள். உங்களுடைய முறைப்பாடுகள் உண்மையாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

நீங்கள் யாராகவும் இருக்கலாம். முறைகேடுகள் இடம்பெறுவதைப் பார்த்துக் கொண்டும் முறைப்பாடு செய்யாவிட்டால் நீங்களும் அந்த முறைகேடுகளுக்கு உதவியவர்களாகின்றீர்கள்.

எனவே எவ்விதமான தயக்கமும் இன்றி கீழ்கண்ட தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது பக்ஸ் மூலமோ உங்கள் முறைப்பாட்டை அறிவிக்கலாம்.

நீங்ள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:- 2877657, 2877658, 2877659, 2877662, 2877663

தொலைநகல் இலக்கங்கள்:- 2877634, 2877635, 2877636, 2877637, 2877638, 2877639.

நீங்கள் முறைப்பாடு செய்யும்போது மாவட்டம், தேர்தல் தொகுதி, வாக்களிப்பு நிலையம், சம்பவம் இடட்பெற்ற நேரம், சம்பவத்தின் விவரம், சம்பவதில் ஈடுபட்டவர்கள், உடந்தையானவர்கள் மற்றும் பொறுப்பானவர்களின் பெயர்களை அறிவிக்க வேண்டும். நீங்கள் விரும்பினால் உங்கள் பெயரையும் விவரத்தையும் அறிவிக்கலாம். ஆனால் அது கட்டாயமானது அல்ல.

உங்களுக்கு வசதி கிட்டினால் உதவி அரசாங்க அதிகாரிக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்கலாம், என்றும் தேர்தல் ஆணையாளர் திஸாநாயக்க அறிவித்துள்ளார். (க)

# மட்டக்களப்பு நகரில் குண்டு வீச்சு 4சிப்பாய்கள், கான்ஸ்டபிள் காயம்

மட்டக்களப்பு, நவ.17

மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் நேற்று இரவு இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதல்களில் நான்கு இராணுவத்தினரும் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும் காயமுற்றனர்.

மட்டக்களப்பு இருதயபுரத்தில் வாக்களிப்பு நிலையத்திற்கு அண்மித்ததாக நேற்றிரவு 7.40 மணியளவில் இடம் பெற்ற கைக்குண்டு வீச்சில் நான்கு இராணுவத்தினர் காயமுற்றனர் என மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் சீ. டி. ரணசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, மட்டக்களப்பு கூளாவடியில் உள்ள கூளாவடி மகாவித்தியாலயத்தில் வாக்களிப்பு நிலையக் கடமையில் இருந்த பாதுகாப்புப் படையினரை நோக்கி வீசப்பட்ட கைக்குண்டில் ஓர் இராணுவச் சிப்பாயும் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும் காயமுற்றனர்.

இருதயபுரச் சம்பவத்தில் காயமுற்றோர் வீ.சி.கே.சந்திரசேன, மனோஜ் இந்திக, டி.எஸ்.பி. பத்திரன ஆகிய இராணுவத்தினரும் -

கூளாவடிச் சம்பவத்தில் சமன் மீவோந்திர எனும் இராணுவச் சிப்பாயும், சீ.டி. தயாரத்தின எனும் பொலீஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்தனர் என மட்டக்களப்புப் பொலீஸார் தெரிவித்தனர்.

காயமுற்ற அனைவரும் மட்டு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் -

வன்செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் தாம் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

## படையிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் தப்பியோடியுள்ளனர். தப்பியோடிய இராணுவச் சிப்பாய்களைக் கைதுசெய்வதற்காக குருநாகல் பொலீஸார் நேற்று தீவிர தேடுதல் நடத்தியபோதும் அவர்களில் ஒருவர் சிக்கினார். ஏனையோர் 'டிமிக்கி' கொடுத்து விட்டனர்.

முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது இவர்கள் எப்படி தப்பியோடினார்கள் என்பது பற்றிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (க)

## ஜனாதிபதி வேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்து சமய கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா ஆகியோரின் கொடும்பாவிகளை நடு வீதியில் போட்டு எரித்தனர்.

தடிகளால் கட்டப்பட்ட பாடை ஒன்றில் மூவரினதும் கொடும்பாவிகள் இளைஞர்களால் காவி வரப்பட்டன. திருநெல்வேலிச் சந்தியின் மையத்தில் வைக்கப்பட்ட அவற்றுக்கு இந்து சமய முறைப்படி இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன. பின்னர் அவற்றுக்கு கொள்ளி வைக்கப்பட்டு அவை எரியூட்டப்பட்டன.

கொடும்பாவிகள் எரியூட்டப்பட்டபோது தொடர்ச்சியாகப் பட்டாசுகள் வெடிக்கவைக்கப்பட்டன. அவற்றால் கிளம்பிய பெரும் சத்தம் சந்தைப் பகுதியைப் அதிரவைத்தது.

இச்சத்தத்தை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த படையினர், அங்கிருந்த பொதுமக்களிடம் "இங்கு ஹர்த்தால் நடக்கிறதா?" - என்று விசாரித்தனர். சந்தியில் எரிந்துகொண்டிருந்த கொடும்பாவிகளையும் நெருங்கிச் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து திருநெல்வேலிப் பகுதியில் ஆயுதம்தாங்கிய படையினர் நிறுத்தப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. (ம-12-15-17)

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தில் மாற்றமில்லையென்றும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் கடந்த வியாழக்கிழமை புலிகள் நடத்திய ஆலோசனைகளின் முடிவில் தமிழ்த் தேசியத் தலைமை உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்ட புலித்தேவன், அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையென்றும் தெரிவித்தார்.

இதனிடையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான எமது நிலைப்பாடு பற்றி முரண்பட்ட தகவல்களை ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

கடந்த 10 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆலோசனைக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் எமது நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்கமாகத் தெரிவித்தது.

கடந்த 10 ஆம் திகதி ஊடகவியலாளர்களிடம் நாம் தெரிவித்த நிலைப்பாட்டிலிருந்து எதுவித மாற்றமும் இல்லை. - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-க)

## வாக்களிப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிகேடியர் நளின் விதாரண தெரிவித்தார்.

இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் சுமார் இரண்டாயிரம் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மலையகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கைங்கரியத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இ.தொ.கா. மாற்றுத் தீர்மானமொன்றை எடுத்திருப்பதாகவும், அதன்படி மலையக மக்களின் நல்வாழ்விற்காக மஹிந்த ராஜபக்ஷவிற்கே ஆதரவளிக்க வேண்டுமெனவும் கோரும் துண்டுப் பிரசுரம் மாகாண சபை உறுப்பினர் இராதாகிருஷ்ணனின் போலிக் கையொப்பத்துடன், தோட்டக் கமிட்டித் தலைவர்மார் அனைவருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவை துண்டுப்பிரசுரமாகவும் விநியோகிக்கப்பட்டன.

நாவலப்பட்டி, ஹட்டன், கினிகத்தேனை, கொட்டகலை, டிக்கோயா, நானுஓயா, புசல்லாவ, நுவரெலியா, மாத்தளை, கண்டி உட்பட தோட்டப்பகுதிகள் பலவற்றில் இவை விநியோகிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் இதனை நேற்று முற்று முழுதாக நிராகரித்த மாகாண சபை உறுப்பினர் இராதாகிருஷ்ணன் இவ்வாறான கடிதத்திற்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும், மாற்றுக்கட்சிக்காரர்களின் அநாகரீக செயற்பாடே இதுவென்றும் குற்றஞ்சாட்டினார். (க)

## குடாநாட்டின் பல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போதும் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் - என்று கூறப்பட்டது.

இதேவேளை, நேற்றிரவு 8.30 மணிக்கு சாவகச்சேரியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டுகள் வீசப்பட்டன என்று பின்னிரவில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மானிப்பாய் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது. எனினும், அது வெடிக்காததால் சேதம் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீதும் நேற்று இரவு 8 மணியளவில் கைக்குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது.

இதேவேளை -

அச்சுவேலி ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு அண்மையிலும் நேற்றிரவு 8.30 மணியளவில் குண்டொன்று வெடித்தது. இதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்து அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீதும், பொலீஸ் நிலையத்தின் மீதும் நேற்றிரவு 10.50 மணியளவில் இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் நேற்றிரவு 10.55 மணியளவில் மந்திகை, புலோலியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டு வீசப்பட்டதாகவும், அது வெடிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அல்வாய் நாவலடியில் உள்ள இராணுவ முகாம் மீதும் நேற்றிரவு 11.10 மணியளவில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. (8-7-11-14-70-74-86)

## தமிழர் தாயகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் - பொதுமக்கள் வாக்களிப்பில் பங்குபற்றாத நிலையே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, தெற்கில் வாக்களிப்பு தீவிரமாகவும் அதிகளவிலும் இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

இன்று நடைபெறும் தேர்தலில் ஒரு கோடியே 33 லட்சத்து 27 ஆயிரத்து 160 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள 10,486 வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தோரைவிட மேலதிகமாக 2 லட்சத்து 92 ஆயிரத்து 326 பேர் இம் முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 13 வேட்பாளர்கள் போட்டியிடும் இந்தத் தேர்தலில், வாக்குகளை எண்ணும் 713 நிலையங்கள் அமையவுள்ளன. தபால்மூல வாக்குகளை எண்ணும் 97 நிலையங்களும், இடம்பெயர்ந்தவர்களின் வாக்குகளை எண்ணுவதற்காக 16 நிலையங்களும் இவற்றுள் அடங்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார் பில் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா தேசிய முன்னணியின் சார்பில் விமல் கீகனகே, புதிய இடதுசாரி முன்னணி சார்பில் சமில் ஜயநெத்தி, ஐக்கிய ஜனநாயக கூட்டமைப்பின் சார்பில் அஜித் குமார ஜயவீர, ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் சார்பில் சிறிதுங்க ஜெயசூரிய, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி சார்பில் நெல்சன் பெரேரா,சோஷலிஸ சமத்துவக் கட்சியின் சார்பில் விஜே டயஸ், ஐக்கிய லலித் முன்னணியின் சார்பில் அநுர சில்வா, றுகுணு மக்கள் கட்சியின் சார்பில் அருண சொய்ஸா, தேசிய அபிவிருத்தி முன்னணியின் சார்பில் அச்சல அசோக்க சுரவீர, ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியின் சார்பில் விக்டர் ஹெட்டிகொட, ஐக்கிய தேசிய மாற்று முன்னணியின் சார்பில் சாந்த தர்மத்த ஆகியோர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இன்று காலை ஏழு மணியிலிருந்து மாலை நான்கு மணிவரை தேர்தல் வாக்களிப்பு நடைபெறும். வாக்குகளை எண்ணும் பணிகள் இரவு எட்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. தபால் மூல வாக்குகளை எண்ணும் பணிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் தபால்மூல வாக்குகளின் பெறுபேறு இன்றிரவு எட்டு மணியளவில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-க)


**Bachelor of Information Technology**

**Semester III & V**

**BIT கற்கைநெறிக்கான Semester III மற்றும் V ற்கான விரிவுரைகள் எதிர்வரும் 19.11.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.**

Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
T.P : 021 222 8060


## மரத்தில் கட்டிவைத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் பட்டப் பகலிலும் திருட்டுச்சம்பவங்கள் நடைபெறுகின்றன.

"தற்போது நடைபெற்று வரும் திருட்டுச் சம்பவங்களின் முக்கிய சூத்திரதாரிகள் சிக்குண்டுள்ளனர். இவர்கள் போலித்துப்பாக்கிகளைக் காட்டித் தொலைபேசி மற்றும் நகைகளை அபகரித்துச் செல்கின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள் எம்மிடம் சிக்குண்டுள்ளனர். இவர்களுக்கான தண்டனையை நீங்களே முடிவு செய்யுங்கள் " - என்று எழுதப்பட்டிருந்தது.

குறித்த இளைஞர் திருடினார் எனத் தெரிவிக்கப்படும் இடங்களின் விவரங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. "இவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் தண்டனையில் இனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது" - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இளைஞர் கட்டப்பட்டிருந்த இடத்தில் நேற்றுக்காலை முதல் கூடிய பொது மக்கள், இளைஞரை பொல்லுகளால் தாக்கினர். சுமார் 3மணி நேரம் இளைஞர் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டார். படுகாயமடைந்த அவர் இறுதியில் மயக்கமடைந்தார். அதற்கு முன்னர் அவர் தன்னைத் தாக்கவேண்டாம் எனக் கெஞ்சினார்.

இந்து ஆரம்பப் பாடசாலை முன்பாக இருந்து காலை 9மணியளவில் பொது மக்களால் அகற்றப்பட்ட இளைஞர், குறுக்கே தடியொன்று கொடுத்து கைகள் கட்டப்பட்ட நிலையில், அருகில் உள்ள யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்த கூடைப் பந்தாட்டக் கம்பத்தில் கயிற்றில் தொங்கவிடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் இளைஞர் உயிரிழந்து விட்டார் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

காலையில், இளைஞர் கட்டி வைத்துத் தாக்கப்பட்ட சமயம் அவரது தாயார் அங்கே வந்து தனது மகனை விட்டுவிடுமாறு கெஞ்சினார். எனினும் அவரை விரட்டி விட்ட பொது மக்கள் இளைஞரை மூர்க்கமாகத் தாக்கினர். உயிரிழந்த இளைஞனின் சகோதரியும் பின்னர் அங்கு வந்து தம்பியின் சடலத்தின் மீது வீழ்ந்து கதறியழுதார்.

காலை 10மணியளவில் இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டனர்.

தனது மகன் நேற்றுமுன்தினம் பகல் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் சிலரால் பிடித்துச் செல்லப்பட்டார் எனவும் -

அதன் பின்னர் அவர் கட்டி வைத்துத் தாக்கப்படுகிறார் என காலையில் தனக்குத் தகவல் கிடைத்தது என்றும்- இளைஞரது தாயார் தெரிவித்தார். இளைஞனின் உடலில் பல அடி காயங்கள் காணப்பட்டன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. தலைமயிர் ஒழுங்கற்ற முறையில் ஒட்டவெட்டப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் யாழ்.பொலீஸாரால் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அடித்துக் கொல்லப்பட்டவரான தினேஷ், திருட்டுக் குற்றச்சாட்டின் கீழ் முன்னர் யாழ். சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-ம-7-12-13-15-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.